ஜைநமதத்திலே பரமாணுக்கள் ஜக3த்காரணம். ஜீவாஜீவாத்மகமான ஜக3த்து நிரீஶ்வரமாகவும் ஷட்3த்3ரவ்யாத்மகமாகவும் இருக்கும். அந்த த்3ரவ்யங்கள் தான் - ஜீவ - த4ர்ம - அத4ர்ம - புத்3க3ல - கால - ஆகாஶரூபேண ஷட்3வித4மாய் இருக்கும். அவற்றில் ஜீவர்கள் - ப3த்3த4 - யோக3ஸித்3த4 - முக்தபே4தே3ந த்ரிவித4ராய் இருப்பர். த4ர்மமாவது - க3திமான்களுடைய க3திஹேதுபூ4தமான வ்யாபியான த்3ரவ்யவிஶேஷம். அத4ர்மமாவது - ஸ்த2ாவரஹேதுபூ4தமான வ்யாபியான த்3ரவ்யவிஶேஷம். புத்3க3லமாவது - வர்ண - க3ந்த4 - ரஸ - ஸ்பர்அவத்தான த்3ரவ்யவிஶேஷங்கள், அதுதான் பரமாணுரூபமுமாய், தத்ஸங்க4ாதரூபமான வாய்வக்3நி - ப்ருதி2வீ ஶரீரபு4வநாதி3 ரூபமுமாய், த்3விவித4மாய் இருக்கும். காலமாவது - பூ4த - ப4விஷ்யத்3 - வர்த்தமாந வ்யவஹாரஹேதுவாய் அணுரூபமான த்3ரவ்யவிஶேஷம். ஆகாஶமாவது - ஏகமாய் அநந்த ப்ரதே3ஶயுக்தமான த்3ரவ்யவிஶேஷம். இவற்றில் அணுவ்யதிரிக்தங்களான த்3ரவ்யங்கள் பஞ்சாஸ்திகாயங்கள் என்று சொல்லப்படும். அவையாவன - ஜீவாஸ்திகாயமும், த4ர்மாஸ்திகாயமும், அத4ர்மாஸ்திகாயமும், புத்3க3லாஸ்திகாயமும், ஆகாஶாஸ்திகாயமும். அஸ்திகாயமாவது - அநேகதே3ஶவர்த்தியான த்3ரவ்யம். இன்னமும் ஜீவர்களுக்கு மோக்ஷோபயோகி3யான ஸங்க்3ரஹாந்தரமும் உண்டு. அதாவது - ஜீவமும், அஜீவமும், ஆஸ்ரவமும், பத்3த4மும், நிர்ஜரமும், ஸம்வரமும், மோக்ஷமும் என்று. இவற்றில் மோக்ஷோபாயமும் அந்தர்க3தம். அதாவது - ஸம்யஜ்ஜ்ஞாநத3ர்ஶநசாரித்ரரூபமாய் இருக்கும். ஜீவன் - ஜ்ஞாநத3ர்ஶநஸுக2 வீர்யகு3ணகனாய் இருப்பன். அஜீவமாவது - ஜீவபே4ாக்3யவஸ்துஜாதம். ஆஸ்ரவமாவது - பே4ாகே3ாபகரணமான இந்த்3ரியாதி3கள். ப3ந்த4ந்தான் - க4ாதிகர்மசதுஷ்டயமும், அக4ாதிகர்மசதுஷ்டயமுமாக அஷ்டவித4மாயிருக்கும். அதில் க4ாதிகர்மசதுஷ்டயம் - ஜீவகு3ணமாய் ஸ்வாப4ாவிகங்களான ஜ்ஞாநத3ர்ஶந ஸுக2வீர்யங்களுக்கு ப்ரதிக4ாதமாய் இருக்கும். அக4ாதிகர்மசதுஷ்டயமாவது - ஶரீரஸம்ஸ்த2ாநமும், தத3பி4மாநமும், தத்ஸ்தி2தியும், தத்ப்ரயுக்தஸுக2-

து3:க2ாபேக்ஷைகளுமாகிற இவற்றுக்கு ஹேதுபூ4தமாய் இருக்கும். நிர்ஜரமாவது- மோக்ஷஸாத4நமாய், அர்ஹது3பதே3ஆவக3தமான தபஸ்ஸு. ஸம்வரமாவது - ஸமாதி4ரூபமான இந்த்3ரியநிரோத4ம். மோக்ஷமாவது- ராக3ாதி3க்லேஶ- நிவ்ருத்திபூர்வகமான ஸ்வாப4ாவிகஸ்வரூபாவிர்ப்ப4ாவம். இக்ரமத்திலே ப்ருதி2வ்யாதி3 ஹேதுபூ4தங்களான அணுக்கள், கணாத3 மதத்திலேபோல் சதுர்வித4ங்களன்றிக்கே ஏகவித4ங்களாயே இருக்கும். ப்ருதி2வ்யாதி கார்யபே4த3ம் பரிணாமக்ருதம். ஸர்வவஸ்துக்களும் ஸத்த்வாஸத்த்வ - நித்யத்வாநித்யத்வ - பி4ந்நத்வாபி4ந்நத்வாதி3களாலே அநேக - ஸ்வப4ாவங்களாயிருக்கும். ஜீவஸ்வரூபம் தத்தச்ச2ரீரஸமபரிமாணமாய் இருக்கும். இது ஜைநமதம்.

ஜைநமதக2ண்ட3நம்

இதுவும் அநுபபந்நம். ஒரு வஸ்துவுக்கு எக்காலத்திலும் விருத்3த4த4ர்மம் கூடாது. த்3ரவ்யத்துக்கு ஸ்வரூபேண ஸத்த்வ - நித்யத்வ - அநந்யத்வங்களும் அவஸ்த2ாரூபேண அஸத்த்வ - அநித்யத்வ - பி4ந்நத்வங்களும் கொள்ளில், த்3ரவ்யமும் அவஸ்தை2களும் அந்யோந்யபி4ந்நங்களாகையாலே ஒரு வஸ்துவிலே விருத்3த4த4ர்மஸமாவேஶஸித்3தி4 இல்லை. த்3ரவ்யத்துக்கும் தத3வஸ்தை2களுக்கும் அபே4த3ம் கொள்ளில், ஆகாரபே4த3ம் கொண்டு விரோத4ம் பரிஹரிக்கக்கூடாது. அவைகள் அந்யோந்யபி4ந்நாபி4ந்நங்கள் என்னில், பே4த3ாபே4த3ங்களுக்கு அவிரோத4 நிர்வாஹகமான ஆகாராந்தரம் இல்லாமையாலே அவ்வித4ம் நிர்வஹியாது. ஜீவாதி3ஷட்3த்3ரவ்யங்கள் பரஸ்பரபி4ந்நங்களாகையாலே ஸர்வவஸ்துக்களும் பி4ந்நாபி4ந்நத்வாதி3விருத்3த4த4ர்மயுக்தங்கள் என்னுமதுவும் வ்யாஹதம். காலம் ஸர்வவஸ்து விஶேஷணமாகத் தோன்றுகையாலே அணுவுக்கு ஸர்வவஸ்த்வதி4கரணம் கூடாமையாலே அதுக்கு அணுத்வம் கூடாது. வஸ்துக்கள் தோறும் விஶேஷணமான அணுபூ4தகாலம் பி4ந்நாபி4ந்நம் என்று கொள்ளில், "இக்காலத்தில் அநேகபத3ார்த்த2ங்கள் இருக்கின்றன" என்கிற ப்ரதீதிக்கு விரோத4ம் ப்ரஸங்கி3க்கும். ஜீவன் தே3ஹபரிமாணன் என்னின் கர்மாநுகு3ணமாக க3ஜஶரீரத்தை விட்டு, பிபீலிகாஶரீரத்திலே ப்ரவேஶிக்கும்போது ஜீவஸ்வரூபத்துக்கு

அபூர்த்திப்ரஸங்க3ம் வரும். ஸங்கோசவிகாஸங்களைக் கொண்டு அபூர்த்தி - ப்ரஸங்க3த்தை பரிஹரிக்கில் அவற்றைக்கொண்டே அநித்யத்வாதி3களும் ப்ரஸங்கி3க்கும். ஈஶ்வரஸஹகாரமில்லாப் பரமாணுக்களுக்கு காரணத்வம் கூடாது என்னுமிடம் ஸ்பஷ்டம். இத்யாதி3 தோ3ஷங்கள் விஸ்தரேண சொல்லப்பட்டன.

பஶுபதிமதம்

ஶைவமதம் வேத3விருத்3த4மாகையாலும் அநுபபந்நமாகையாலும் அநாத3ரணீயம் என்கிறது. எங்ஙனேயென்னில் - காபாலர் என்றும், காளாமுக2ர் என்றும், பாஶுபதர் என்றும், ஶைவர் என்றும் ஶிவமதஸ்த2ர் நாலுவகைப்பட்டிருப்பர்கள். இவர்கள் எல்லாரும் நிமித்தோபாத3நங்களுக்கு பே4த3ங்களையும் பஶுபதிக்கு நிமித்தகாரணத்வத்தையும் கொள்ளுகிறார்கள். வேத3விருத்3த4மான மோக்ஷஸாத4நங்களையும் கொள்ளுகிறார்கள். இவர்களில் காபாலர் கணிகாருசிகாதி3முத்3ராஷட்கவானாய், பரமுத்3ராபி4ஜ்ஞனாய், ப4க3ாஸநஸ்த2ாத்மத்4யாநம் பண்ணுகிறவன் முக்தனாவான் என்பர்கள். காளாமுக2ர் - கபாலபாத்ரபே4ாஜநம், ஶவப4ஸ்மஸ்நாநம், தத்ப்ராஶநம், லகு3ட3த4ாரணம், ஸுராகும்ப4 ஸ்த2ாபநம், அதிதை3வபூஜநம், இத்யாதி3களை ப2லஸாத4நம் என்பர்கள். இப்படிக்கு ஆசாராதி3கள் பலவும் ஶைவாக3மாதி3களிலே கண்டுகொள்வது.

பஶுபதிமதக2ண்ட3நம்

இதுவும் அநுபபந்நம். பராவரதத்த்வவ்யத்யாஸமும், உபாஸநாபே4த3மும், ஆசாரபே4த3மும், வேத3 விருத்3த4ங்களாகையாலே அப்ரமாணங்கள். இவர்கள் அநுமாநப்ரமாணத்தாலே நிமித்தேஶ்வரனைக் கொள்ளுகிறார்கள். அப்படி அநுமாநத்தாலே நிமித்தேஶ்வரனைக் கொள்ளும்போது த்3ருஷ்டாநுஸாரேண குலாலன் ம்ருத்பிண்ட3த்தை அதி4ஷ்டி2க்கிறாப்போலே நிமித்தேஶ்வரன் ப்ரக்ருதியை அதி4ஷ்டி2க்கிறான் என்று கொள்ளவேணும். அதி4ஷ்ட2ாநத்துக்கு ஶரீரம் வேண்டுகையாலே அஶரீரனுக்கு அதி4ஷ்ட2ாநம் கூடாது. அவனுக்கு ஶரீரத்தைக் கொள்ளில், அது ஸாவயவமாகில், அநித்யத்வம் ப்ரஸங்கி3க்கும். அது நித்யம் என்று

கொள்ளில், அதுக்கு உத்பத்திகாரணம் இல்லாமையாலே ஶரீரத்வம் ஸித்3தி4யாது. ஈஶ்வரன் தானே ஶரீரஹேது என்னில், அநவஸ்தை2 வரும். அஶரீரனான ஜீவனுக்கு ஶரீராதி4ஷ்ட2ாநம் போலே அஶரீரனான ஈஶ்வரனுக்கு ப்ரக்ருத்யதி4ஷ்ட2ாநம் கூடும் என்னில், ஜீவனுக்கு ஶரீராதி4ஷ்ட2ாநம் கர்மப2லபே4ாக3ார்த்த2மாகையாலே, அப்படி ஈஶ்வரன் ஶரீரத்வேந ப்ரக்ருதியை அதி4ஷ்டி2த்தால் கர்மப2லபே4ாக3ம் ப்ரஸங்கி3க்கும். ஶரீரவ்யதிரிக்தமாக அதி4ஷ்டி2க்கில், ஶரீராந்தராபேக்ஷை ப்ரஸங்கி3க்கும், ஶரீரநிரபேக்ஷமாக அதி4ஷ்ட2ாநம் ஶரீரத்வப்ரயுக்தமாகையாலே ஶரீராதிரிக்தாதி4ஷ்ட2ாநத்திலே ஶரீரம் வேண்டும், ஶரீரத்வேந அதி4ஷ்டி2க்கில் பே4ாக3ம் ப்ரஸங்கி3க்கும் இத்யாதி3 தூ3ஷணங்கள் விஸ்தரேண சொல்லப்பட்டன.

இப்படி ப்3ரஹ்மகாரணவாத3விருத்3த4மான கபிலாதி3ப3ாஹ்ய மதங்கள் எல்லாம் ஸூத்ரவ்ருத்திப4ாஷ்யாதி3களிலே விஸ்தரேண நிரஸ்தங்கள்.

இந்த ப்3ரஹ்மஸூத்ரத்துக்கு பரமர்ஷிப்ரணீதவ்ருத்திவிருத்3த4மாக மாயாவாதி3களும், ப4ாஸ்கரீயர்களும், யாத3வப்ரகாஶீயர்களும், மாத்4வர்களும் வ்யாக்2யாநம் பண்ணினார்கள். அவை ஸூத்ரஸ்வாரஸ்யவிருத்3த4ம் என்னுமிடம் **ஶ்ருதப்ரகாஶிகையிலும்**, **பாராஶர்ய விஜயத்திலும்**, **பஞ்சமத ப4ஞ்ஜநத்திலும்**, **ஶாரீரகப4ாஸ்கரா**தி3களிலும் விஸ்தரேண சொல்லிற்று. அவையும் இங்கே தி3ங்மாத்ரம் சொல்லப்படுகின்றன.

மாயாவாதி3மதம்

மாயாவாதி3மதத்திலே ஸகலவிஶேஷஶூந்யமான சைதந்யமாத்ரம் த்ரிகாலாப3ாத்4யமான ஸத்யம். அந்த சைதந்யத்திலே மாயா-அவித்3யாதி3ஶப்3த3-வாச்யமான ப4ாவரூப - அஜ்ஞாநம் என்கிற தோ3ஷத்தாலே ப்4ராந்திபரிகல்பிதமாக ஜ்ஞாநஜ்ஞேயாதி3ப்ரபஞ்சம் தோன்றுகிறது. இதுக்கு தத்த்வஜ்ஞாநத்தாலே நிவ்ருத்தி. ஶுக்திகையிலே ரஜதபு3த்3தி4யானது, தோ3ஷாந்தரஸ்த2ஸத்யரஜதவிஷயமன்று. கிந்து, தோ3ஷவஶத்தாலே உண்டான ரஜதம் கோ3சரிக்கிறது. "நேத3ம் ரஜதம்" என்கிற

பு3த்3தி4யாலே இதுக்கு நிவ்ருத்தி. ஸத்யரஜதத்துக்கு சக்ஷுஸ்ஸந்நிகர்ஷம் இல்லாமையாலும், அந்யத2ாக்2யாதி கூடாமையாலும், இப்படி அநிர்வசநீயரஜதம் கொள்ளவேணும். இத்தை த்3ருஷ்டாந்தமாகக் கொண்டு நிர்விஶேஷசைதந்யஸ்வரூப ப்3ரஹ்மத்திலே தே3ாஷகல்பிதமானப்ரபஞ்சத்துக்கு ப்3ரஹ்மஸ்வரூபாதி4ஷ்ட2ான - ஜ்ஞாநத்தாலே நிவ்ருத்தியைக் கொள்ளவேணும். அந்த நிவ்ருத்தியை மோக்ஷம் என்பது. இதிலே ஜீவேஶ்வரவிப4ாக3 விஷயத்திலே அநேகபக்ஷங்கள் உண்டு. எங்ஙனேயென்னில் - சிந்மாத்ரஸம்ப3ந்தி4யான மாயையிலே சித்ப்ரதிபி3ம்ப3ம் ஈஶ்வரன், அந்த மாயையினுடைய பரிச்சி2ந்நாந்தப்ரதே3ஶங்களிலே ஆவரணவிக்ஷேபங்களாலே சித்ப்ரதிபி3ம்ப3ம் ஜீவன் என்று சிலர். த்ரிகு3ணாத்மிகையான மாயையாகிற மூலப்ரக்ருதிக்கு, அநித்3த4-ஸத்த்வப்ரத4ாநையான மாயையென்றும், மலிநஸத்த்வையான அவித்3யையென்றும் ரூபத்3வயம் உண்டு. அதிலே மாயாப்ரதிபி3ம்ப3ம் ஈஅ;வரன்; அவித்3யாப்ரதிபி3ம்ப3ம் ஜீவன் என்று சிலர். மூலப்ரக்ருதி ஒன்றே விக்ஷேபப்ராத4ாந்யத்தாலே மாயை என்கிறது. தத3வச்சி2ந்நன் ஈஶ்வரன்; அந்த மூலப்ரக்ருதியே ஆவரணப்ராத4ாந்யத்தாலே அவித்3யை என்றும் அஜ்ஞாநம் என்றும் சொல்லப்படுகிறது. தத3வச்சி2ந்நன் ஜீவன் என்றும் சிலர். விக்ஷேபமாவது - அந்யப்ரதிப4ாஸம். ஆவரணமாவது - பூர்வாகாரதிரோத4ாநம் என்பர். இன்னமும், அவித்3யையிலே சித்ப்ரதிபி3ம்ப3ம் ஈஶ்வரன், அந்த:கரணத்திலே சித்ப்ரதிபி3ம்ப3ம் ஜீவன் என்று சிலர். இன்னமும் பக்ஷாந்தரம் உண்டு. இதிலே ப்ரபஞ்சத்துக்கு மித்2யாத்வமாவது - ப்3ரஹ்மஜ்ஞாநப3ாத்4யத்வம். இதிலே ப்ராதிப4ாஸிகஸத்தை, வ்யாவஹாரிகஸத்தை, பாரமார்த்தி2கஸத்தை என்று த்ரிவித4ஸத்தை உண்டு. அவற்றிலே முதலாவது - அநிக்திரஜத - ரஜ்ஜுஸர்ப்பாதி3களிலே; த்3விதீயை - ப்ரபஞ்சத்திலே; த்ருதீயை - ப்3ரஹ்மத்திலே என்பர். ப்3ரஹ்மஸ்வரூபையான ஸத்தை ஒன்று என்றும் சொல்லுவர்கள். ப4ாவரூப-அஜ்ஞாநாவ்ருதமான க3டாதி3கள் தோற்றும்போது இந்த்3ரியஸந்நிகர்ஷத்தாலே அஜ்ஞாநத்திலே சி2த்3ரம் பிறந்து க4டாதி3கள் தோற்றுகின்றன என்று சிலர். இந்த்3ரியத்தாலே அஜ்ஞாநம் பாய் போல் சுருட்டிக்கொள்ளுகையாலே க4டாதி3ப்ரத்யக்ஷம் என்று சிலர்.

இந்த்3ரியஸம்ப3ந்த4த்தாலே அஜ்ஞாநமானது பீ4ருவத் அபஸர்ப்பிக்கையாலே க4டாதி3ப்ரத்யக்ஷம் என்று சிலர்; எத்தனை ஜ்ஞாநவ்யக்திகளோ, அத்தனை அஜ்ஞாநவ்யக்திகளாகையாலே இந்த்3ரியஸந்நிகர்ஷத்தாலே தத்தத3ஜ்ஞாந நாஶத்தாலே க4டாதி3ஜ்ஞாநம் என்று சிலர். இன்னமும் பக்ஷாந்தரம் உண்டு. இதிலே ப்ரபஞ்சநிவ்ருத்தி த்4யாநஜந்ய-அபூர்வத்தாலே என்று ப்ராசீநமாயாவாதி3பக்ஷம். வாக்யஜந்யப்3ரஹ்ம-அபரோக்ஷஜ்ஞாநத்தாலே ப்ரபஞ்சநிவ்ருத்தி என்று அங்கராதி3கள் பக்ஷம். இன்னமும் ஏகாவித்3யை என்றும், நாநாऽவித்3யை என்றும், நாநாஜீவர்கள் என்றும், ஏகஜீவன் என்றும் பக்ஷபே4த3ங்கள் உண்டு. இன்னமும் ஶுகவாமதே3வாதி3களுக்குத் தத்த்வஜ்ஞாநம் பிறந்தது, மோக்ஷம் மாத்ரம் பிறக்கவில்லை என்றும், தத்த்வஜ்ஞாநமே ஒருவருக்கும் பிறந்ததில்லை என்றும் பக்ஷபே4த3ம் உண்டு. இப்படி அவாந்தரபக்ஷபே4த3ங்கள் பலவும் இருந்தாலும், நிர்விஶேஷ சைதந்யமாத்ரம் ஸத்யம், மற்றை ப்ரபஞ்சம் அந்த சைதந்யத்தினுடைய அவித்3யாபரிகல்பிதமாகையாலே மித்2யை, சைதந்யஸ்வரூபமான ப்3ரஹ்மமே அந்த:கரணாவச்சி2ந்நமாதல், தத்ப்ரதிபி3ம்பி3தமாதல் ஜீவனாகையாலே ஜீவப்3ரஹ்மங்களுக்கு அத்3வைதம். ஏவம்வித4 - அத்3வைதஜ்ஞாநத்தாலே அவித்3யாநிவ்ருத்தியே மோக்ஷம் என்னுமிடம் ஸர்வமாயாவாதி3களுக்கும் ஸித்3த4ாந்தம்.

மாயாவாதி3மதக2ண்ட3நம்

இதிலே ஜீவேஶ்வரவிப4ாக3ாதி3 விஷயமான அவாந்தரபக்ஷங்கள் அவர்களாலே அந்யோந்யம் ஏவ நிரஸ்தங்கள்.

இனி அஜ்ஞாநத்தினாலே ப்ரபஞ்சம் கல்பிதம் என்கிற இது, அநுபபந்நம். ஜ்ஞாநரூபமான ப்3ரஹ்மத்தை தந்நிவர்த்த்யமான அஜ்ஞாநம் ஆவரிக்கமாட்டாது. ஆவரிக்கில், அதுக்கு நிவர்த்தகம் இல்லை. தேஜஸ்ஸை திமிரம் ஆவரிக்கமாட்டாதே, ஆவரிக்கில் அதுக்கு தேஜஸ்ஸு நிவர்த்தகமாகமாட்டாமையாலே; வேறு நிவர்த்தகம் இல்லையே. ஶுக்தித்வம் தோற்றாதே அநிக்திஸ்வரூபமாத்ரம் தோற்றி அதிலே

ரஜதப்ரமம் பிறக்கும். பின்பு அநிக்தித்வம் தோற்றில் அது நிவ்ருத்தமாகிறது. அப்படி ப்ரஹ்மஸ்வரூபம் ஸதர்மகம் அல்லாமையாலே ஸ்வரூபமாத்ரம் தோற்றில் ப்ரபஞ்சப்ரமம் ப்ரதிபத்தமாம். அது தோற்றாவிடில் ப்ரமஹேது இல்லை. ஆகையால் ப்ரபஞ்சப்ரமம் அநுபபந்நம். காசாதிதேஶாஷம் ஸத்யமாகையாலே ப்ரமஹேதுத்வம் கூடும். அவித்யாऽऽக்யதேஶாஷம் மித்யையாகையாலே ப்ரமஹேதுத்வம் கூடாது. அது கூடுமென்னில் ப்ரஹ்மஸ்வரூபமான அதிஷ்டாநம் மித்யை என்று கொண்டாலும் ப்ரபஞ்சப்ரமம் கூடலாம். அவித்யாநிவ்ருத்தி ப்ரஹ்மஸ்வரூபாதிரிக்தையோ? தத்நதிரிக்தையோ? அதிரிக்தையாம்போது, அது ஸத்யமென்னில், அத்வைதஹாநி ப்ரஸங்கிக்கும்; மித்யையென்னில், மோக்ஷம் மித்யையாம். அது ப்ரஹ்மஸ்வரூப-அநதிரிக்தை என்னும் போது, ப்ரஹ்மஸ்வரூபம் நித்யமாகையாலே தத்த்வஜ்ஞாநஸாத்யத்வம் பக்நமாம். இந்த தத்த்வஜ்ஞாநந்தான் உபதேஶாஸம்பவத்தாலே துர்கடம். கீதாசார்யப்ரப்ருதிகளுக்கு தத்த்வஜ்ஞாநம் பிறந்ததாகில் ஸ்வவ்யதிரிக்தர் ஒருவர் இல்லாமையாலே அவர்களைக் குறித்து உபதேஶம் கூடாது. தத்த்வஜ்ஞாநம் இல்லையாகில் அஜ்ஞராகையாலே உபதேஶிக்கமாட்டார்கள். ஒருவருக்கும் தத்த்வஜ்ஞாநம் பிறந்ததில்லை என்கிற பக்ஷத்திலே இதாநீந்தநருக்கு ஶ்ரவணாதிப்ரவருத்தி கூடாது. ஜ்ஞாநம் பிறந்ததாகிலும் மோக்ஷம் பிறந்ததில்லை என்னில் ஶுகாதிகள் முக்தரானார்கள் என்கிற ப்ரஸித்தி கூடாது. வாக்யஜந்யஜ்ஞாநம் மோக்ஷஸாதநமாகில் த்யாநாதிவிதிகள் வ்யர்த்தமாம். அபரோக்ஷப்ரமத்துக்கு பரோக்ஷமான வாக்யஜந்யஜ்ஞாநம் நிவர்த்தகமாகமாட்டாது. ஶாப்தஜ்ஞாநத்துக்கு பரோக்ஷத்வம் கேவுக்கு அஶ்வத்வம் போலே அஸம்பாவிதம். த்யாநாதிவிதிகள் அத்வைதஸாக்ஷாத்காரார்த்தம் என்கையும், த்யாநாதிகள் பேதவாஸநாऽऽதயகங்களாகையாலே அநுசிதம். ப்ரத்யக்ஷாதி ஸகலப்ரமாணங்களிலும் விஶிஷ்டவஸ்துவே விஷயமாகையாலே நிர்விஶேஷ வஸ்துவில் ப்ரமாணம் இல்லை. சைதந்யஸ்வரூபமாத்ரத்திலே யோகாசாரனுக்கும் மாயாவாதிகளுக்கும் விவாதம் இல்லை. இனி சைதந்யம் நித்யம் என்று மாயாவாதிகள் ஸாதிக்கும்போது, ஸாத்யமான நித்யத்வம் ஸ்வரூபாத்மகமோ?

பிந்நமோ? அதில் ஸ்வரூபாத்மகமென்னில், ஸ்வரூபத்திலே விவாதம் இல்லாமையாலே ஸாதநம் வ்யர்த்தம். ஸ்வரூபாதிரிக்தமாகில், ஸவிஶேஷத்வம் ப்ரஸங்கிக்கும். நித்யத்வஸாதகமான ஹேதுவானது சைதந்யஸ்வரூபமான பக்ஷத்தில் இல்லையாகில் ஸ்வரூபாஸித்திதேஶாஷம் ப்ரஸங்கிக்கும். ஹேது இருந்ததாகில் ஹேதுதர்மத்தாலே ஸவிஶேஷத்வம் ப்ரஸங்கிக்கும். "அயம் கட:" என்கிற இதுமுதலான ப்ரத்யக்ஷங்கள் "இதம் இத்தம்" என்று கேசாரிக்கையாலே நிர்விஶேஷவஸ்துவில் ப்ரத்யக்ஷம் ப்ரமாணம் ஆகாது. ப்ரக்ருதிப்ரத்யயரூபத்தாலும், பதவாக்யரூபத்தாலும், விஶிஷ்டபேதகமான அப்தப்ரமாணமும் நிர்விஶேஷ வஸ்துவில் ப்ரமாணம் ஆகமாட்டாது. ஆகையாலே ஸம்ஸாரபந்தம் மித்யை, அதுக்கு நிர்விஶேஷப்ரஹ்மஜ்ஞாநம் நிவர்த்தகம் என்கை கூடாமையாலே உபாஸநஜந்யபக்வத்ப்ரஸாதமே ஸத்யமான கர்மாதிரூபமான ஸம்ஸாரத்துக்கு நிவர்த்தகம் என்று கொள்ளவேணும். இந்த மாயாவாதிமததூஷணம் பாஷ்யாதிகளிலே இன்னம் பஹுவிதமாக ப்ரபஞ்சிக்கப்பட்டது.

பாஸ்கரமதம்

பாஸ்கரமதத்திலே ப்ரஹ்மஸ்வரூபமும் உபாதிஸ்வரூபமும் ஸத்யம். ஜீவப்ரஹ்மங்களுக்கு பேதம் ஸத்யோபாதிப்ரயுக்தம். அபேதம் ஸ்வாபாவிகமாய் இருக்கும். அசித்ப்ரஹ்மங்களுக்கு பேதாபேதங்கள் ஸ்வாபாவிகங்களாய் இருக்கும். ஜீவர்களுக்கு அந்யோந்யபேதம் ஔபாதிகமாய் இருக்கும். கடாகாஶகதமான அல்பத்வாதிதேஶாஷங்களும் அபிமத விநியோகார்ஹத்வரூபகுணமும் மஹாகாஶத்தில் ப்ரஸங்கியாதாப் போலவும், கடாகாஶ - கரகாகாஶாதிகளுக்கு பரஸ்பரபேதமும் கார்யபேதமும் உண்டானாற் போலவும், உபாத்யவச்சிந்நஜீவகதகுணதேஶாஷங்கள் ப்ரஹ்மத்திலே ப்ரஸங்கியாதே வ்யவஸ்திதங்களாய் இருக்கும். உபாதிபேதகதமான பரஸ்பரபேதங்களை உடைத்தான ஜீவர்களுடைய குணதேஶாஷங்களும் வ்யவஸ்திதங்களாய் இருக்கும். இப்படி பேதம் ஔபாதிகமாகையாலே பேதஶ்ருதிகள் தத்பரங்கள், அபேதம் ஸ்வாபாவிகமாகையாலே

அபே4த3ஶ்ருதிகள் முக்2யங்கள். அசித்3ப்3ரஹ்மங்களுக்கு பே4த3ாபே4த3ங்கள் ஸ்வாப4ாவிகங்களாகையாலே ஸர்வமும் ப்3ரஹ்மாத்மகம் என்கிற அஶ்ருதியும் ப்3ரஹ்மத்துக்கு நிர்மலத்வஶ்ருதியும் உபபந்நை. ப்ரபஞ்சஸத்யம் கொள்ளுகையாலே ஸ்வபக்ஷஸாத4க ப்ரமாணஸித்3தி4யும் உண்டு. உபாதி4யாவது - பு3த்3தீ4ந்த்3ரிய தே3ஹாதி3 ரூபமாய் இருக்கும். அதினுடைய ஸத்யத்வமாவது - பாரமார்த்தி2கத்வம். உபாதி4யுக்தப்3ரஹ்மாம்ஶம் ஜீவன். உபாதி4யும் தத்ஸம்யோக3மும் கர்மக்ருதம். கர்மமும் உபாதி4ஸம்ப3த்3த4 ஜீவக்ருதம். இதுதான் பீ3ஜாங்குரந்யாயத்தாலே அநாதி3யாய் இருக்கும். ப்3ரஹ்மத்துக்கு ஔபாதி4க ஜீவப4ாவாநுப4வமே ஸம்ஸாரம். உபாதி4நிவ்ருத்திபூர்வகமான பே4த3ப்4ரமநிவ்ருத்தியே மோக்ஷம். பே4த3ப்4ரமநிவ்ருத்தியும் வர்ணாஶ்ரமத4ர்ம ஸஹிதமாய் ப்3ரஹ்மாத்மைகத்வ-விஷயமாய், அவிச்சி2ந்தஸ்ம்ருதிஸந்தாநரூபமான உபாஸநத்தாலே ஸித்3தி4க்கிறது. ஸத்யமான ப3ந்த3த்துக்கு மித்2யாபூ4தத்துக்குப்போலே ஜ்ஞாநமாத்ரநிவர்த்யத்வம் கூடாமையாலே உபாஸநஜ்ஞாநம் வேண்டுகிறது. இது ப4ாஸ்கரமதம்.

ப4ாஸ்கரமதக2ண்ட3நம்

இதுவும் அநுபபந்நம். உரக3க்ஷதாங்கு3லிபோலே நிரவயவமான ப்3ரஹ்மஸ்வரூபம் சே2த3நார்ஹமல்லாமையாலே, ஜீவக3தகு3ணதோ3ஷங்கள் ப்3ரஹ்மஸ்வரூபத்திலே அவஶ்யம் ப்ரஸங்கி3க்குமாகையாலே, நிர்தோ3ஷஶ்ருதி விரோத4ம் வரும். க4டாகாஶாதி3த்3ருஷ்டாந்தத்தாலே வ்யவஸ்தை2யும் சொல்ல வொண்ணாது, க4டஸம்யுக்தாகாஶப்ரதே3ஶம் நியதமல்லாமையாலே க4டாத்3 இதரமான த3சையில் ஆகாஶத்துக்கு அநியதக4டஸம்ப3ந்த4ம் வருகிறாப்போலே ப்3ரஹ்மஸ்வரூபத்துக்கும் அநியதோபாதி4ஸம்ப3ந்த4மும் க்ஷணேக்ஷணே ப3ந்த4மோக்ஷங்களும் ப்ரஸங்கி3க்கும். அசித்3ப்3ரஹ்மங்களுக்கு பே4தம் போலே அபே4தமும் ஸ்வாப4ாவிகமாகையாலே அசித்3க3த பரிணாமாதி3தோ3ஷம் ப்3ரஹ்மத்துக்குப் ப்ரஸங்கி3க்கும். ப்3ரஹ்மம் ஸ்வரூபேண அசித்தாகப் பரிணமிக்கிறதில்லை. ப்3ரஹ்மஶக்தியே அப்படி பரிணமிக்கிறது என்கையும் கூடாது. அந்த ஶக்தி ப்3ரஹ்மத்தினுடைய பரிணாமமோ? ப்3ரஹ்மாத்மகமோ? முதல்

ஶிரஸ்ஸிலே, ப்3ரஹ்மத்துக்குப் பரிணாமித்வம் ப்ரஸங்கி3க்கும். த்3விதீயஶிரஸ்ஸிலும், ப்3ரஹ்மாத்மகஶக்தியினுடைய பரிணாமம் ப்3ரஹ்மபரிணாம மாகையாலே பரிணாமித்வம் ப்ரஸங்கி3க்கும். ஆகையாலே அசித்3ப்3ரஹ்மங்களுக்கு ஸ்வாப4ாவிகபே4த3ாபே4தங்கள் என்றும் சித்3ப்3ரஹ்மங்களுக்கு பே4த3ம் ஔபாதி4கம், அபே4த3ம் ஸ்வாப4ாவிகம் என்றும் கொள்ளுகிற ப4ாஸ்கரமதம் அநுபபந்நம் என்னுமிடம் ப4ாஷ்யாதி3களிலே விஸ்தீர்ணம்.

யாத3வமதம்

யாத3வப்ரகாஶமதத்திலே ஜீவப்3ரஹ்மங்களுக்கும் அசித்3ப்3ரஹ்மங்களுக்கும் பே4த3ாபே4த3ங்கள் ஸ்வாப4ாவிகங்கள், ஸந்மாத்ரப்3ரஹ்மம் சித3சித்3ரூபேண பரிணமிக்கிறது. ஆகையாலே கார்யகாரணாநந்யத்வமும், ஜீவப்3ரஹ்மாபே4த3மும் உபபந்நம். இதிலே ஶங்கரபக்ஷத்திற்போலே மித்2யோபாதி4ப்ரயுக்தபே4த3மும் ப4ாஸ்கரபக்ஷத்திற்போலே ஸத்யோபாதி3ப்ரயுக்தபே4தமும் இல்லை. கிந்து பே4த3ாபே4தங்கள் ஸ்வாப4ாவிகங்கள். ஸ்வாபி4ந்நங்களான சித3சித3ாதி3களிலே ஸ்வபி4ந்நத்வபு3த்3தி4 ஸம்ஸாரம். ஜ்ஞாநகர்மஸமுச்சயத்தாலே ப3ந்த4 நிவ்ருத்திபூர்வகமான பே4த3ஜ்ஞாநநிவ்ருத்தியே மோக்ஷம். இது யாத3வப்ரகாஶமதம்.

யாத3வமதக2ண்ட3நம்

இதுவும் அநுபபந்நம். எங்ஙனேயென்னில் - ஜீவப்ரஹ்மங்களுக்கு பே4த3ம் ஸ்வாப4ாவிகமாகையாலே ஜீவக3தபுருஷார்த்த2ம் ப்3ரஹ்மத்திலே ப்ரஸங்கி3யாதேயாகிலும் பே4த3ம்போலே அபே4த3மும் ஸ்வாப4ாவிகமாகையாலே அபுருஷார்த்த2ாந்வயம் அவஶ்யம் ப்ரஸங்கி3க்கும். இப்படியே அசித்3க3ததோ3ஷமும் ப்ரஸங்கி3க்கும். ஒரு ம்ருத்பிண்ட3த்தில் உண்டான க4டஶராவாதி3களால் உண்டான உத3காஹரணகார்யங்கள் அந்த ம்ருத்பிண்டக3தமாகிறாப்போலே ஸந்மாத்ரப்3ரஹ்ம பரிணாமபூ4தரான ஸர்வஜீவர்களுடைய ஸுக2து3:க2ாதி3களும் ப்3ரஹ்மத்தினிடத்திலே ப்ரஸங்கி3க்கும். க4டஶராவாநுபயுக்தம்ருத்3த்3ரவ்யம் உத3காஹரணாதி3-கார்யாநந்விதமாகிறாப்போலே, ஜீவப4ாவாநுபயுக்தமான ப்3ரஹ்மாம்ஶம்

34கல்யாணகு3ணகரமாய் இருக்கிறது என்னவும் ஒண்ணாது. ஒன்றுக்கே ஏகாம்ஶத்தாலே து3:கி2த்வமும் அம்ஶாந்தரத்தாலே ஸுகி2த்வமும் ஈஶ்வரத்வஹேதுவாகாது. ஒருவனுக்கு ஒருகையிலே சந்த3நக்குழம்பும் மற்றைக்கையிலே காட்டுத்தீயுமானால், து3:க2ாந்வயம் தவிராதே. அப்படியே ப்3ரஹ்மத்துக்கு அம்ஶபே4தே3ந ஸுக2து3:க2ங்கள் வ்யவஸ்தி2தங்களாய் இருந்தாலும், அம்ஶிக்கு ஹேயஸம்ப3ந்த4ம் தவிராது. ஆகையாலே, ஜீவப்3ரஹ்மங்களுக்கு ஸ்வாப4ாவிகபே4தமும், ஶரீராத்மப4ாவேந தாத3ாத்ம்யமும், ஶரீரவாசிஅப்3த3ங்கள் ஶரீரிபர்யந்தங்களாகையாலே ஸமாநாதி4கரண நிர்தே3ஶத்தினுடைய முக்2யத்வமும் கொள்ளுகை யுக்தம். இன்னமும் ஒன்றுக்கு ஒன்றினுடைய பே4த3ாபே4த3ங்கள் விருத்3த4ங்களாகையாலே அஸம்ப4ா விதங்கள். ஜாத்யாத்மநா அபே4த3மும் வ்யக்த்யாத்மநா பே4த3மும் கொள்ளில், ஜாதிவ்யக்திகள் அபி4ந்நங்களானால் ஜாத்யபி4ந்தக2ண்டவ்யக்திக்கு ஜாத்யபி4ந்நமுண்ட3- வ்யக்த்யபே4தம் ப்ரஸங்கி3க்கும், ஜாதிவ்யக்திகள் மிதே2ாபி4ந்நங்களானால் அபே4த3ம் ஜாதிக3தம், பே4த3ம் வ்யக்திக3தமாகையாலே ஒரு வஸ்துவுக்கே பே4த3ாபே4தங்கள் ஸித்3தி4யாது. ஆகையாலே பே4த3ாபே4த3வாத3ம் அநுபபந்நம். இது ப4ாஸ்கர பக்ஷத்திலும் ஒக்கும். இன்னமும் ஸந்மாத்ரப்3ரஹ்மம் சித3சிதீ3ஶ்வரரூபமாகப் பரிணமிக்கிறது என்கிற யாத3வபக்ஷத்திலே, ப்ரளயத்திலே சித3சிதீ3ஶ்வரர்கள் காரணரூபமான ஸந்மாத்ரப்3ரஹ்மத்திலே லயிக்கையாலே புநரபி ஸ்ருஷ்டித3ஶையிலே பூர்வகல்பஸ்த2சித3சிதீ3ஶ்வரபேத3ாவஸ்த2ாநம் இல்லாமையாலே க்ருதஹாந அக்ருதாப்4யாக3மங்கள் ப்ரஸங்கி3க்கும். கடகமகுடாதி3கள் அழிந்து ஸுவர்ணபிண்ட3மாய், புந: கடகமகுடாதி3கள் ஆகும்போது, பூர்வம் கடகமான அம்ஶம் இப்போதும் கடகமாய், பூர்வம் மகுடமான அம்ஶம் இப்போதும் மகுடமாய்ப் பரிணமிக்கும் என்கை கூடாதே. அப்படியே சித3சிதீஶ்வரரூபணே புந: பரிணமிக்கும்போது பரிணாமத்துக்கு அம்ஶபே4த3நியமம் கூடாமையாலே க்ருதகர்மத்துக்கு ப2லாப2ாவமும், கர்மமின்றிக்கே இருக்குமதுக்கு ப2லமும் ப்ரஸங்கி3க்கும். இத்யாதி3 தூ3ஷணங்கள் விஸ்தரேண ப4ாஷ்யாதி3களிலே சொல்லப்பட்டது.

35மாத்4வமதம்

மாத்4வமதத்திலே ப்3ரஹ்மஸ்வரூபம் நிமித்தகாரணமாத்ரம். ப்ரக்ருதி உபாத3ாநகாரணம். கு3ணகு3ணிகளுக்கு அபே4த3முண்டு. சேதநாசேதநங்களுக்கு ப்3ரஹ்மஶரீரத்வம் இல்லை. ஜீவஸ்வரூபங்களுக்கு மித2ஸ்தாரதம்யம் உண்டு. உபக்ரமோபஸம்ஹாரங்களிலே உபஸம்ஹாரத்துக்குப் ப்ராப3ல்யம் கொண்டார்கள்.

மாத்4வமதக2ண்ட3நம்

இதுவும் அநுபபந்நம். ஶ்ருதி-ஸ்மருதி - இதிஹாஸ - புராணங்களிலே ப்3ரஹ்மத்துக்கு ஜக3து3பாத3ாந காரணத்வம் சொல்லுகையாலே தத3பலாபம் கூடாது. சேதநாசேதநங்களுக்கு ப்3ரஹ்மஶரீரத்வம் ஶ்ருத்யாதி3ஸித்3த4மாகையாலே தத்த்யாக3ம் அநுசிதம். கு3ண்யதிரிக்தகு3ணத்தை நிராகரித்தும் நிர்கு3ணவாத3 நிராகரணம் து3ஷ்கரம். பே4த3ப்ரதிநிதி4யான விஶேஷாங்கீ3காரமும் அநுபபந்நம். கு3ணகு3ணிப4ாவத்துக்கு பே4த3ம் உபபாத3கமாகையால், பே4த3ம் இல்லையாகில் த4ர்மத4ர்மிப4ாவம் கூடாது. பே4த3மில்லாவிடிலும் த4ர்மத4ர்மிப4ாவஸித்3த்4யர்த்த2ம் விஶேஷமென்னில் - அது க்லுப்தமோ? கல்ப்யமோ? அது க்லுப்தம் என்னவொண்ணாது; அஸித்3த4மாகையாலே. இனி கல்ப்யமென்னில், ப்ரயோஜந-நிரபேக்ஷகல்பநம் அநுசிதம், ஆகையாலே விஶேஷகல்பநம் அநுபந்நம். ஜாத்யாதி3தே3ாஷங்கள் பாராஶர்யவிஜயாதி3களிலே விஸ்தரேண சொல்லப்பட்டன. நீலகண்ட2ப4ாஷ்யப்ரக்ரியையும் ஸூத்ரஸ்வாரஸ்யவிருத்3தை4 என்றும் பாராஶர்யவிஜயாதி3களிலே சொல்லப்பட்டது.

விஶிஷ்டாத்3வைத ஸித்3த4ாந்தம்

இத்3தே3ாஷங்கள் ஒன்றுமின்றிக்கே ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸபுராண-ஸ்வாரஸ்யாநுகு3ணமாய், ஸூத்ரகாரஹ்ருத3யாநுகு3ணமாய், தத3பி4ப்ராய-வேதி3களாய் தத3வ்யவஹித ஶிஷ்யரான ப4க3வத்3 பே3ாத4ாயந ப்ரணீத-வ்ருத்யநுஸாரியான ப4க3வத்3ப4ாஷ்யகார ஸித்3த4ாந்தத்திலே,

சித்3சித்3விஶிஷ்டப்3ரஹ்மம் ஒன்றே தத்தவம். சேதநாசேதநங்களுக்கு விஶேஷணத்வம் ஶரீரத்வப்ரயுக்தமாய் இருக்கும். ப்3ரஹ்மத்துக்கு விஶேஷ்யத்வம் ஶரீரித்வப்ரயுக்தமாய் இருக்கும். பே4ாக3ாயதநம், சேஷ்டாஶ்ரயம், கரபாத3ாதி3யுக்தம், இத்யாதி3 ப்ரவ்ருத்தி நிமித்தங்கள் அவ்யாப்தங்களாகையாலே, ஶ்ருதிஸ்ம்ருத்யாதி3- ஸர்வப்ரயோக3ாநுமதமாய், ஶ்ருத்யாதி3ஸித்3த4மான அந்த:ப்ரவிஷ்டபுருஷ- நியாம்யத்வமே ஶரீரபத3ப்ரவ்ருத்திநிமித்தமாகையாலே சேதநாசேதநங்களுக்கு ப4க3வச்ச2ரீரத்வம் உபபந்நம். ஶரீரஶரீரிகளுக்கு மிதே2ாபே4த3மும், ஶரீரங்களுக்குப் பரஸ்பரபே4த3மும், அசேதநங்களுக்குப் பரஸ்பரபே4த3மும், சேதநங்களுக்குப் பரஸ்பரபே4த3மும் கொள்ளுகையாலே பே4த3ஶ்ருதிஸ்வாரஸ்யமும்- கு3ணதே3ாஷ வ்யவஸ்தை2யும் ஸித்3த4ம். ஶரீரஶரீரிப4ாவம் கொள்ளுகையாலே ஶரீரஶ்ருதிகளா கிற க4டகஶ்ருதிஸ்வாரஸ்யமும் ஸித்3த4ம். ஶரீரவாசிஶப்3த3ம் ஶரீரிபர்யந்தமாகை யாலே ஶரீரபூ4தசேதநாசேதநவாசிஶப்3த3ங்கள் ஶரீரபூ4த சேதநாசேதநத்3வாரா ஶரீரியான ப4க3வத்பர்யந்தத்திலே ஶக்தங்களாகையாலே சேதநாசேதநவாசி ஶப்3த3ங்களுக்கு ப்3ரஹ்ம- வாசகஶப்3த3ங்களோடே ஸமாநவிப4க்த்யந்தத்வரூபமான ஸாமாநாதி4கரண்யம், சேதநாசேதநவிஶிஷ்ட ஸ்வரூபத்துக்கும் ஸார்வஜ்ஞாதி3 விஶிஷ்டஸ்வருபத்துக்கும் தாத3ாத்ம்ய பே3ாத4கமாகையாலே அபே4தஶ்ருதி ஸ்வாரஸ்யமும் ஸித்3த4ம். ஶரீரஶரீரி ப4ாவாதி3களைக்கொண்டு உபபாதி3க்கப்படுகிற விஶிஷ்டதாத3ாத்மயம் விஶிஷ்டாத்3வைதம் என்னப்படும். இப்படி முக்2யமாக அன்றிக்கே “ராஜா ராஷ்ட்ரம்” என்னுமாபோலே ஸாமாநாதி4கரண்யத்தை அமுக்2யமாகக் கொள்ளுகை த்3வைதம் என்னப்படும். இந்த த்3வைதபக்ஷத்திலே ஶரீரஶ்;ருதிகளுக்கு ஸ்வாரஸ்யாப4ாவம் ஸித்3த4ம். விஶிஷ்டவாசகங்களான ஜீவபரவிஷயஶப்3த3ங்களுக்கு விஶேஷணங் களை விட்டு விஶேஷ்யஸ்வரூபத்திலே லக்ஷணை கொண்டு அநித்3த4ஸ்வரூபைக்யம் கொள்ளுகை அத்3வைதம் என்னப்படும். இந்த பக்ஷத்திலே பத3வாக்யங்களுக்கு அத்யந்தம் அஸ்வாரஸ்யம் ஸித்3த4ம். ஸகு3ண- ஶ்ருதிகளுக்கும் அப்ராமாண்யம் ஸித்3த4ம். விஶிஷ்டாத்3வைதத்திலே ப்3ரஹ்மம் சித3சிச்ச2ரீரகத்வேந உபாத3ாநமுமாய், ஸங்கல்பாஶ்ரயத்வேந நிமித்தமுமாய்,

காலாதி3விஶிஷ்டமாய்க் கொண்டு ஸஹகாரியுமாய் இப்படி த்ரிவித4காரணமாய் இருக்கும். அப்ருத2க்ஸித்3த4 ஸம்ப3ந்த4த்தாலே அவஸ்தா2ாஶ்ரயமாய் இருப்பது உபாத3ாநமாகையால், க4டத்துக்கு ம்ருத்பிண்ட3ம் உபாத3ாநம்; பூ4தலம் அநுபாத3ாநமாய் இருக்கும். ஸர்வ ப்ரயோக3ாநுமதமாக உபாத3ாநஅப்3த3ார்த்த2ம் கொள்ள வேண்டுகையாலே அப்ருத2க்ஸித்3த4 ஸம்ப3ந்த4ம் விவக்ஷிதம். நிமித்தகாரணத்துக்கும் உபாத3ாந காரணத்துக்கும் பே4த3ம் - ம்ருத்பிண்ட3த்துக்கும், குலாலனுக்கும் ஶரீரஶரீரிப4ாவம் இல்லாமையால் வந்தது; கிந்து அவற்றுக்கு பே4த3நியமமில்லை. காலத்துக்கு ஸ்வஸம்யோக3த்திலே காலத்வேந நிமித்தத்வமும் த்3ரவ்யத்வேந ஸமவாயிகாரணத்வமும் வைஶேஷிகர் கொள்ளுகையாலே, ப்3ரஹ்மத்தினுடைய அபி4ந்நநிமித்தோபாத3ாநகாரணத்வத்துக்குச் சிலந்திப்பூச்சியை ஶ்ருதிதானே த்3ருஷ்டாந்தமாகச் சொல்லுகையாலே, ஸ்வஶரீர பரிணமயித்ருத்வரூபையான அபி4ந்ந நிமித்தோபாத3ாநதை ஶ்ருத்யபி4மதையாய் இருக்கும். ம்ருத்பிண்ட3ம் ஸ்வயம் ஶரீரி அல்லாமையாலே உபாத3ாநமாத்ரமாய் இருக்கும். குலாலன் ம்ருத்பிண்ட3ஶரீரகன் அல்லாமமையாலே நிமித்தமாத்ரமாய் இருக்கும். சிலந்திப்பூச்சியானது பரிணாமிஶரீரகமாய் பரிணமயிதாவுமாகையாலே அபி4ந்நநிமித்தோபாத3ாநமாய் இருக்கும். அது த்ருஷ்டாந்தமாகையாலே ப்3ரஹ்மம் ஸ்வஶரீரபரிணாமயிதாவாகிற அபி4ந்நநிமித்தோபாதா3நமாய் இருக்கும். ஸகு3ணத்வாதி3கள் கொள்ளுகையாலே ஸகு3ணஶ்ருத்யாதி3களுக்கு ஸ்வாரஸ்யம் உண்டு. கு3ணாதி3நிஷேத4ஶ்ருதிகள் ஹேயகு3ணாத்3யப4ாவபரங்கள். ஐக்யவிதி4கள் விஶிஷ்டைக்யபரங்கள். பே4த3நிஷேத4ம் விஹிதைக்ய- விரோதி4ஸ்வதந்த்ரபே4த3 நிஷேதபரம். வாச்யத்வாதி3நிஷேத4ஶ்ருதி பரிச்சே2த3ாப4ாவபரம். உத்பத்திநிஷேத4ம் கர்மக்ருதோத்பத்யப4ாவபரம். உத்பத்திஶ்ருதிகள்ஸ்வேச்ச2ாக்ருதாவதாரபரங்கள். ஜீவர்களுக்கு பரஸ்பரைக்ய வசநம் ஜ்ஞாநைகாகாரதயா ப்ரகாரைக்யபரம். ப்3ரஹ்மத்துக்கு அத்3விதீயத்வவசநம் சித3சிச்ச2ரீரகத்வேந ஸ்வஸஜாதீய த்3விதீயரஹிதத்வபரம். இப்படி ஶரீரஶரீரி களுக்கு பே4த3ம் கொள்ளுகையாலே ப3ந்த4மோக்ஷ வ்யவஸ்தை2யும், உபதே3ஶாதி3களும், தத்த்வஜ்ஞாநவ்யவஸ்தை2யும் உபபந்நம். ஈஶ்வரன், ஸ்வாதந்த்ர்யமடியாக சேதநபூர்வகர்மஸாபேக்ஷனாகையாலே

விதி4நிஷேத4ஶாஸ்த்ரவையர்த்த்2ய ப்ரஸங்கம் இல்லை. ஈஶ்வரனுக்கு நித்யநிரவதி4க கல்யாணகு3ணாகரத்வமும், சேதநனுடைய கர்மோபாஸநாதி3ஜந்ய ப்ரஸாத3 விஶேஷங்களும், ப்ராமாணிகங்களாகையாலே, நிர்விகாரஶ்ருதிகள் ஹேயவிகாராப4ாவபரங்கள். ப்ரபஞ்சரூபேண ப3ஹுப4வநம் ஸித்த3த4மாகையாலே அபுருஷார்த்த2விகாரநிஷேத4ங்கள் ஸாக்ஷாத்ஸம்ப3ந்தே4ந விகாராத்3யப4ாவபரங்கள். புண்யபாபஜந்யமான ப4க3வத்ப்ரீத்யப்ரீதிகளே ஸ்வர்க்க3நரகாதி3- ஹேதுக்களாகையாலே அபூர்வகல்பநம் அநபேக்ஷிதம். கல்பபே4த3ங்களிலே இந்த்3ராதி3 வ்யக்திகள் நஷ்டங்களானாலும், இந்த்3ராதி3ஶரீரியான ஜீவாத்மா ஸ்த2ாயியாய் இருக்கையாலே க்ருதகர்மத்துக்கு ப2லஹாநி இல்லை. இந்த்3ராதி3தே3வதாப்ரஸாத3ம் அவாந்தரஹேதுவாகையாலே தத்3வையர்த்த்2யம் இல்லை. பரமாத்மாவே மநுஷ்யாதி3களுக்கு இந்த்3ராதி3த்3வாரேணவும், இந்த்3ராதி3களுக்கு அத்3வாரேணவும் ஆராத்4யனாகையாலே இந்த்3ராதி3களுக்கு யஷ்ட்ருத்வ - யஷ்டவ்யத்வ விரோத4மில்லை. பரப்3ரஹ்மத்துக்கு சேதநனுடைய ஆத்3யது3ஷ்கர்ம ப்ரவ்ருத்தியிலே அநிவர்த்தநமும், அநுமதியும் ஸ்வாதந்த்ர்ய ப்ரயுக்தமாகையாலே தோ3ஷமன்று. ஸ்வாதந்த்ர்யம் தோ3ஷம் என்பதும் ப்3ரஹ்மம் ஸித்3தி4த்தேயோ? ஸித்3தி4யாதேயோ? ப்3ரஹ்மம் ஸித்3தி4த்து ஸர்வாதந்த்ர்யம் தோ3ஷம் என்னில் - அது ப்3ரஹ்மஸாத4கப்ரமாணஸித்3த4மாகையாலே தோ3ஷமாகாது. ப்3ரஹ்மம் ஸித்3தி4யாவிடில் முதலிலே ஆஶ்ரயம் இல்லாமையாலே ஸ்வாதந்த்ர்யம் தோ3ஷமாகாது. ப்ராதிகூல்யநிவ்ருத்தசேதநவிஷயத்திலே த3யாதி3கு3ணங்கள் கார்யகரங்களாகையாலே அவற்றுக்கு வையர்த்த்2யம் இல்லை. அநாதி3கர்மப்ரவாஹ ஹேதுகமான ப்ரக்ருதிஸம்ப3ந்த4மாகிற ஸம்ஸாரப3ந்த4ம் ஸத்யமாகையாலே ப4க3வதுபாஸநாதி3 ஜந்யப4க3வத்ப்ரஸாத3த்தாலே தந்நிவ்ருத்தி உபபந்நை. சேதநபே4த3ம் கொள்ளுகையாலே வ்யக்திபே4தே3ந ப3ந்த4மோக்ஷங்கள் உபபந்நங்கள். இப்படி ப்ரமேயஸ்வாரஸ்யமும் உண்டு. ப்ரபஞ்சஸத்யத்வம் கொள்ளுகையாலே ஸ்வபக்ஷஸாத4ந-பரபக்ஷதூ3ஷணப்ரமாணஹாநியும் இல்லை. ப4ாக3த்3வயாத்மகமான வேத3ஶரீரத்திலே பூர்வப4ாக3ம் மித்2யாவிஷயம், உத்தரப4ாகமாத்ரம் ப்3ரஹ்ம விஷயமாகையாலே ஸத்யவிஷயம் என்று கொள்ளுகிற

ராஹுமீமாம்ஸகனான ஶங்கரனைப்போலவும், வேத3ஶிரஸ்ஸான உத்தரப4ாக3ம் ஜீவாதிரிக்தப்3ரஹ்மபரம் அன்று; கர்மகர்த்தாக்களான ஜீவர்கள் மாத்ரத்தை ப்ரதிபாதி3க்கையாலே வேத3ாந்தப4ாக3ம் நிஸ்ஸாரம் என்று கொள்ளுகிற கப3ந்த4மீமாம்ஸகரான ப4ாட்டப்ராப4ாகரர்களைப் போலவுமன்றிக்கே, வேத3ஶரீரத்திலே பூர்வப4ாகம் ஆராத4நபூ4த கர்மஸ்வரூபப்ரதிபாத3கம்; உத்தரப4ாகம் ஆராத்யபூ4த - பரப்3ரஹ்மப்ரதிபாத3கம் என்று கொள்ளுகையாலே ஸமக்3ரவேத3ஶரீரஸ்வாரஸ்யமும் ஸித்3தம். இப்படி ப4க3வத்3ப4ாஷ்யகாரராலே விஸ்தரிக்கப்பட்டிருக்கிற விஶிஷ்டாத்3வைதமதம் வ்யாஸப4க3வானுக்கு அத்யந்தாபி4மதமாய் இருக்கும்.

ஸம்பூர்ணம்.

அநுபந்தம்

ஸ்ரீ:

லக்ஷ்மீஸ்தோத்ரம் - பொழிப்புரை

1) ஶ்ரியா யுக்த: ஶ்ரீமாந் ஸ்தி2திஜநிலயாதீ3ந் கலயதே
ஜக3த்யா நைவம் சேத் ஸ்வமபி ந ச புஷ்ணாத்யஶரண: ।
அதஸ்த்வாம் தத்தாத்3ருக்3 து3ரதி4க3ம நிஸ்ஸீமவிப4வாம்
ப4ஜாமோ ருத்3ராணீ பரிசித பத3ாம்பே4ாஜயுக3லீம் ॥

பெரியபிராட்டியாருடன் கூடிய எம்பெருமான் இவ்வுலகின் ஸ்தி2தி, ஸ்ருஷ்டி ஸம்ஹாராதி3களைச் செய்கிறான். இவ்வாறு எம்பெருமான் ஶ்ரிய: பதியாக இருந்து இவற்றைச் செய்யவில்லையெனில் அவன் தன்னையும் போஷித்துக் கொள்வதில்லை. தாயே! ஆகையால் அறியவரிதான எல்லையற்ற பெருமையை உடையவளும், மலைமகளால் போற்றப்பட்ட தாமரை போன்ற திருவடியிணையை உடையவளுமான உன்னை ஸேவிக்கிறோம்.

2) அயி ஶ்ரீஸ்த்வம் பூர்வம் ஜநகதநயீபூ4ய ஜக3 தாம்
ப்ரபே4ா ராமஸ்யாபூ4 : ப்ரியஸஹசரீ கோஸலபதே: ।
தத2ாऽபுஷ்ய: க்ருஷ்ணம் நதஜநநி! ருக்மீந்த்3ர தநயா
விநா த்வாம் கே3ாவிந்த3: ப்ரப4வதி ஜக3த்யாம் க்வசந வா ॥

அடிபணிந்தவர்களிடத்தில் தாய் போல் மிகுந்த கருணையுடைய ஸ்ரீதே3வியே! நீ முன்பு ஜநகமஹாராஜனின் மகளாகி இவ்வுலகங்கள் அனைத்திற்கும் தலைவனும், கோஸலதே3ஶத்திற்கு அதி4பதியுமான இராமபிரானின் இனிய துணைவியானாய். அவ்வாறே ருக்மிணியாய் க்ருஷ்ணனான எம்பெருமானைப் போஷித்தாய். நீயின்றி உன் மணாளனான கோவிந்தன் இவ்வுலகங்களுக்கு ப்ரபு4 ஆவனோ?

3) த்வயா த்₃ருஷ்ட: ஶம்பு₄ஸ் த்ரிபுரமத₂நாயாலமருண-
க்ஷபாநாத₂ாவாஜ்ஞாம் ஶிரஸி நித₃த₄நாவுத₃யத: ।
பிப₃ந் ப₄க்த்யா பத்₃மே! தவ சரண நிர்ணேஜநஜலம்
ப₂ணீநாமீஶாந: பரிவஹதி மூர்த்₄நா வஸுமதீம் ॥

செந்தாமரையில் வாஸம் செய்பவளே! உன்னால் கடாக்ஷிக்கப்பட்டே ஶிவபெருமான் த்ரிபுரத்தை அழிக்க ஸமர்த்த₂னானான். ஸூர்யசந்த்₃ரர்கள் உன் கட்டளையை ஶிரமேற்கொண்டு உதி₃க்கின்றனர். பாம்புகளின் தலைவனான திருவநந்தாழ்வான் உனது திருவடிகளை விளக்கிய தீர்த்த₂த்தைப் பருகியே தனது திருமுடியினால் இவ்வுலகை த₄ரிக்கிறான்.

4) த்வதீ₃யே நம்ரார்தி க்ஷபணநிபுணே பாத₃கமலே
வஹன் மூர்த்₄னா ஜம்ப₄த்₃விஷத₃வதி கீ₃ர்வாணநக₃ரீம் ।
த்வதீய ப்₄ரூப₄ங்க₃ாஜ்ஜனயதி ஜக₃த் பங்கஜ ஜனி:
த்வயா த்₃ருஷ்ட: கோ வா ஜனனி! பத₃முச்சைர் ந ப₄ஜதே ॥

தாயே! அடிபணிந்தவர்களின் துயரங்களைப் போக்கவல்லதான உனது திருவடித்தாமரைகளைத் தனது தலையால் த₄ரித்தே இந்த்₃ரன் தே₃வர்களின் தலைநகரமான அமராவதியைக் காக்கிறான். அவ்வாறே எம்பெருமானின் உந்தித்தாமரையில் பிறந்த பிரமனும் உனது புருவநெறிப்பால் இவ்வுலகைப் படைக்கிறான். உன்னால் கடாக்ஷிக்கப்பட்ட எவன் தான் உயர்ந்த பதவியை அடையமாட்டான். (ஜம்ப₄த்₃விஷத் - ஜம்ப₄ன் என்ற அஸுரனுக்கு எதிரியானவன் - இந்த்₃ரன்)

5) ஹரோ: வக்ஷ: பீடமனுகலமுபாஸ்த₂ாய விபுலாம்
ஸுத₄ாஸாரை: ஶ்ரீமச்சரண நலிநாந்தர் விக₃லிதை: ।
ப்ரஸிஞ்சந்த்யஞ்சந்தீ குமுத₃வநமம்பே₄ாஜ நிலயே!
கத₂ம் வா நாத₄த்ஸே மயி பத₃யுக₃ம் நம்ரஜநனி ॥

தாயே! தாமரைப்பூவில் தோன்றியவளே! எம்பெருமானின் அகன்ற திருமார்பெனும் பீட₂த்தை நித்யவாஸஸ்த₂ாநமாகப் பெற்று, பின்பு உனது அழகான திருவடித்தாமரைகளிலிருந்து பொழிகின்ற அம்ருதமழையால் வழியனைத்தையும் நனைத்துக்கொண்டு குமுதவனத்திற்குச் செல்லுகையில் உன் திருவடியிணையை அடியேன்மீதிலும் ஏன் வைப்பதில்லை?

6) புரா தே பாத₃ாப்₃ஜ ப்ரஸ்ருமரபராக₃ாந் ஸ்வமகுடே
வஹந் ருத்₃ரோऽப்யத்₃ரே: து₃ஹிதரமுத₃ாராமுத₃வஹத் ।
ஶரண்யே! லோகாநாம் முநிஜநவரேண்யே தநுப்₄ருதாம்
அபாங்க₃ஸ்தே பூயாத₃துல குஶலாயாப்₃ஜ நிலயே ॥

முன்பு உனது திருவடித்தாமரைகளிலிருந்து விழுந்த மகரந்த துகள்களைத் தனது மகுடத்தில் த₄ரித்தே ருத்₃ரன் இனியளான அத்₃ரிகந்யையை (மலைமகளை) மணந்தான். இவ்வுலகங்கள் அனைத்திற்கும் தஞ்சமானவளே! தாமரை மலரை இருப்பிடமாகக் கொண்டவளே! உனது கடைக்கண் பார்வை ஜீவராஅணீகளின் ஒப்பற்ற நன்மையின் பொருட்டாகுக.

7) புராரேஸ்த்வாம் புஷ்பை: ஸஹ கி₃ரிஜயாऽऽராதி₄தவதோ
க₃லம் க₃த்வா கே₄ாரம் க₃ரமப₄வதி₃ந்தூ₃பலமிவ ।
அத: ஶ்ரீ:! ஶ்ருத்யந்தா: ப்ரணிஜகு₃ருத₃ாராம்ஸ்தவகு₃ணாந்
இயத்தா நிர்முக்தாநநவதி₄க வாத்ஸல்ய ஜலதே₄ ॥

ஸ்ரீதே₃வியே! வாத்ஸல்ய குணத்திற்கு எல்லையற்ற கடலானவளே! உன்னை மலைமகளுடன் மலர்களினால் ஆராதி₄த்த ஶிவபெருமானின் கழுத்தை அடைந்த கொடிய விஷமானது சந்த்₃ரகாந்தக்கல்லைப் போல் குளிர்ந்த தன்மையை அடைந்தது. அதனாலேயே வேத₃ாந்தங்கள் உன்னை "உத₃ாரா" (வண்மையுடையவள்) என்றும், உன்னுடைய குணங்களை எல்லையற்றவை என்றும் பாடின.

8) ஶரஜ்ஜ்யோத்ஸ்நா காந்திஸ்துஹின கரபி$_3$ம்ப$_3$ாப$_4$வதநா
குசாப்$_4$யாமாநம்ரா குவலயத$_3$லஸ்பர்த்தி$_4$ நயநா |
த$_3$த$_4$ாநா ஹஸ்தாப்$_4$யாம் நலிநயுக$_3$ளம் காऽபி மஹஸாம்
ததிர்விஷ்ணோர் வக்ஷ:ஸ்த$_2$லமதி$_4$வஸந்தீ விஜயதே ||

ஶரத்$_3$கால நிலவிற்கொப்பான காந்தியுடையவளும், சந்த்$_3$ரபி$_3$ம்ப$_3$ம் போன்ற திருமுகத்தை உடையவளும், திருமுலைகளின் ப$_4$ாரத்தால் சிறிது குனிந்தவளும், குவளைமலர்களுடன் போட்டியிடும் திருக்கண்களை உடையவளும், திருக்கைகளில் தாமரைகளை ஏந்தியவளும், எம்பெருமானின் திருமார்பகத்தில் வஸிப்பவளுமான பிராட்டி வர்ணிக்கமுடியாத ஒளிக்கூட்டம் போல் இருந்து கொண்டு வீறுபெறுகிறாள்.

9) ஸசந்த்$_3$ரே ஸோஷ்ணாம்ஶுள விரமதி விரிஞ்சே ஸஹஶிவே
க்ருதாந்தே ஜாதாந்தே ப$_4$ஜதி ச விராமம் ஸுரபதௌ |
அநூபே ஸர்வஸ்மிந் வடத$_3$லதலே த்வத்பதிரஸௌ
முகுந்த$_3$: ஸாநந்த$_3$ம் விஹரதி ரமே! கல்பவிரமே ||

ரமையே! எங்கும் நீர்சூழ்ந்த பொழுதான கல்பத்தின் இறுதிக்காலத்தில் சந்த்$_3$ரன், ஸூர்யன், காலன், தே$_3$வர்தலைவன், ஶிவன், ப்$_3$ரஹ்மா ஆகிய அனைவரும் ஒடுங்கிய பின்னும் உன் மணாளனான முகுந்த$_3$ன் ஆலிலையில் மகிழ்ச்சியுடன் விளையாடுகிறான்.

10) பய: பாராவாரே மணிவிரசிதே மண்டபதலே
ப்ரதீஹாரே வாணீத$_4$ரணித$_4$ர கந்யா பரிவ்ருதே |
மணீபீடே$_2$ தஸ்மிந் கநகமயபத்$_3$மே ஸ்தி$_2$திஜுஷோ
ஹரேரங்கஸ்த$_2$ாம் த்வாம் கதிசன ப$_4$ஜந்தே க்ருததி$_4$ய: ||

பாற்கடலின் கரையில், மணிகளால் செய்யப்பட்ட திருமண்டபத்தில் கலைமகளாலும், மலைமகளாலும் இருபுறமும் சூழப்பட்ட வாயிலில், மணிகளாலான பீட$_2$த்தில் பொன்மயமான தாமரைமலரில் வீற்றிருக்கும் எம்பெருமானின் திருமடியில் அமர்ந்திருக்கும் உன்னைச் சில அறிவாளிகளே ஸேவிக்கின்றனர்.

11) பரவ்யோம்ந: பத்யு: ப்ரியமஹிஷி! தே பாத$_3$ யுக$_3$லீ
நிதி$_3$த்$_4$யாஸா யஸ்மிந்நுத$_3$ய மயதே லோகஜநநி |
ததை$_3$வாஸ்மை தே$_3$வி ப்ரதி$_3$ஶஸி ஸுரேந்த்$_3$ராபி$_4$லஷிதம்
பத$_3$ம் வாணீம் சாபி ப்ரசுர கருணாஸார ப$_4$ரிதாம் ||

பரமபத$_3$நாத$_2$னின் ப்ரியமஹிஷியே! உனது திருவடியிணையின் இடைவிடாத த்$_4$யாநம் எவனுக்கு உண்டாகிறதோ, அப்பொழுதே அவனுக்கு நீ தே$_3$வர் தலைவனாலும் விரும்பப்பட்ட பதவியையும், மிகுந்த கருணை நிறைந்த வாக்கையும் அளிக்கிறாய்.

12) வத$_3$ந்தி த்வாம் ஸந்தோ ஹுதபு$_4$ஜமதி$_4$ஷ்ட$_2$ாய ஸகலம்
ஸமஶநந்தீம் ஹோத்ரா ஹுதமநுஸவம் ஶ்ரீர் ப$_4$க$_3$வதி |
புராணா வாண்யேவம் ப்ரணிக$_3$த$_3$தி பி$_3$ம்பே$_3$ தி$_3$நபதே:
ஸமம் பத்யாநர்க$_4$ாண்யநுதிநமிஹார்க்$_4$யாணி ப$_4$ ஜதே ||

ஹே ப$_4$க$_3$வதி! (கல்யாண கு$_3$ணங்கள் நிறைந்த ஸ்ரீதே$_3$வியே!) ஒவ்வொரு யாக$_3$த்திலும் ருத்விக்குகளால் வேள்வித்தீயில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்ஸை, அந்த அக்$_3$நியை அதி$_4$ஷ்டி$_2$த்து உண்பவளாக உன்னை நல்லோர் பகர்கின்றனர். இவ்வாறே அநாதி$_3$யான மறைநூலும் தினந்தோறும் த்$_3$விஜர்களால் ஸூர்யனை உத்$_3$தே$_3$ஶித்து கொடுக்கப்படும் விலைமதிப்பற்ற அர்க்$_4$யங்களை நீயே உன் மணாளனான எம்பெருமானுடன் அந்த ஸூர்ய பி$_3$ம்ப$_3$த்தில் இருந்து கொண்டு ஏற்கிறாய் என்று கூறுகிறது.

13) த்வமாத்மா த்வம் காலஸ்த்வமஸி ச பரம் ஜ்யோதிருத$_3$தி$_4$:
த்வமக்ஷ்ணோராநந்த$_3$ஸ் த்வமஸி ச பரப் ப்$_3$ரஹ்மமஹிஷீ |
சித$_3$ாத்மா த்வம் லக்ஷ்மீர் ஜக$_3$தி$_3$ஹ தவாபாங்க$_3$ சலனம்
ஸமாலம்ப்$_3$ய ஶ்ரீமாந் ஸ்ருஜதி ப$_4$க$_3$வாநத்யவதி ச ||

தாமரை மலரில் வஸிப்பதில் விருப்பமுடையவளே! தாமரை மலர்கள் நிறைந்த நீர்நிலைகளால் சூழப்பட்டதும், மரங்களின் நிழலால் மறைக்கப்பட்ட ஸூர்யகிரணங்கள் உடையதுமான, புண்யமான காட்டு ப்ரதே3ஶத்தில் வாழ்ந்து கொண்டு, "அருள்வாய்" என்று கூக்குரலிட்டு, எப்பொழுது அடியேன் எனது பாபப2லமான மிகுந்த குற்றங்களைப் போக்கிக் கொள்வேன்.

19) இதி ஶ்ரீபூ4ஸாரம்புரமதி4வஸந் ராக4வகவி:
குலே வாதூ4லாக்2யே மஹதி ஜநிமாந் லோகவிநுதே |
ஸதாம் ஸேவீ ஸத்த்வாதி4க ரகு4வராசார்யதநயாத்
ஸமுத்பந்நோ லக்ஷ்ம்யா: ஸ்துதிபி4ரது4நாSSநர்ச்ச சரணௌ |

இவ்வாறு பூ4ஸாரக்ஷேத்ரமான திருமழிசையில் உலகத்தார் அனைவராலும் வணங்கப்பட்ட உயர்ந்த வாதூ4ல குலத்தில் மிகுந்த ஸாத்விகரான ரகு4வராசார்யரின் குமாரரான நரஸிம்ஹாசார்யரிடமிருந்து தோன்றியவரும், நல்லோர்களைப் பணிபவருமான ராக4வகவி இந்த துதிகளால் பெரிய பிராட்டியாரின் திருவடிகளை அர்ச்சித்தார்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ரணம்

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ரணம்

ஸ்ரீப4க்திஸாரோத3யம் - பொழிப்புரை

1) பூ4மௌ ப4ார்க்க3வ வாமதே3வ ப்4ருக3வோSப்யத்ரிர் வஸிஷ்டே2ாSங்கி3ரா:
ப்3ரஹ்மாணம் ப்ரணிபேதுருத்தமகு3ணம் க்ஷேத்ரம் விஜிஜ்ஞாஸவ: |
ஸ த்வஷ்டுஸ் துலயைகதோ வஸுமதீம் பூ4ஸாரமப்யேகத:
த்4ருத்வா யோகி3வரேப்4ய ஆதி3ஶதி3மம் பூ4ஸாரமப்யுத்தமம் ||

முன்பு த்3வாபரயுகத்தில் ப4ார்க்க3வர், வாமதே3வர், ப்4ருகு3, அத்ரி, வஸிஷ்ட2ர், அங்கிரஸ் ஆகிய மஹர்ஷிகள் பூ4மியில் மிகவும் சிறந்த க்ஷேத்ரத்தை அறிய விரும்பியவர்களாய் ப்3ரஹ்மாவைப் பணிந்தனர். ப்3ரஹ்மாவும் தே3வசிற்பியான விஅ;வர்கர்மாவைக் கொண்டு பூ4மியெல்லாம் ஒரு தட்டும், திருமழிசைக்ஷேத்ரம் ஒரு தட்டுமாக தராசில் வைத்து நிறுக்க, திருமழிசையை வைத்த பக்கம் கனத்திருக்க, அதுவே "மஹீஸாரக்ஷேத்ரம்" என்று யோகி3ஶ்ரேஷ்டர்களான அந்த மஹர்ஷிகளுக்கு எடுத்துரைத்தார்.

2) பூஸாராபி4த4யா விதே3ஹப4வந க்ஷேத்ரம் விநிர்தி3ஶ்ய தேஷ்-
வாஸீநேஷ்வத2 ப4ார்க்க3வோ முநிவரோ தே3வம் ஜக3ந்நாயகம் |
ஸத்ரேணாயதவர்த்திநா ஸ்ம யஜதே பத்நீ தத2ாத்வே முநே:
அம்ஶுனாம்பு3ஜலோசனாயுத4வரஸ்யாபந்ந ஸத்வாSப4வத் ||

இவ்வாறு விதே3ஹப4வநக்ஷேத்ரமாகிய திருமழிசையை பூமியில் சிறந்த இடமாக அறிந்து, அம்மஹர்ஷிகள் அவ்விடத்தில் நித்யவாஸம் பண்ணிக்கொண்டிருக்கும் பொழுது, ப4ார்க்க3வ மஹர்ஷி "தீ4ர்க்க4ஸத்ரம்" என்கிற யாக3த்தாலே ஜக3ந்நாத2ப் பெருமானை ஆராதி4க்கலானார். அப்பொழுது அவருடைய பத்நீ, தாமரைக்கண்ணனான எம்பெருமானின் திவ்யாயுத4ங்களில் சிறந்தவரான ஸுத3ர்அநாழ்வானின் அம்அத்தினால் க3ர்ப்3பி4ணியானாள்.

3) மாஸே த்3வாத3ஶகே3 முநீந்த்3ர க்3ருஹிணீ ஸா த்3வாபரே தைஷ்யகே
ஸித்3த4ார்தி2ந்யஹிமாம்ஶுவார ஸஹிதே தாரே மக2ாக்2யாத4ரே |
ராகாயா அபரேத்3யுரஸ்ய ஜக3த: க்ஷேமாய ஸௌத3ர்ஶநம்
ப்ராஸ்ீதோல்ப3விவேஷ்டனாவ்ருததனும் பிண்ட3ம் ப்ரசண்ட3ார்சிஷம் ||

பன்னிரண்டு மாதங்களுக்குப் பின்பு, ஸித்3த4ார்த்தி வருடத்தில் மக2ம் என்னும் பெயர் கொண்ட நக்ஷத்ரத்தில், ஞாயிற்றுக்கிழமையில் பூர்ணிமைக்கு மறுதி3நம், அந்த ப4ார்க்க3வ முநிவரின் பத்நீ இவ்வுலக நன்மையின் பொருட்டு, திருவாழியாழ்வானின் அம்ஶம் பொருந்தியதும், மிகவும் ப்ரகாஶிப்பதும், க3ர்ப்3ப4 வேஷ்டநத்தினால் மறைக்கப்பட்ட தே3ஹத்தை உடையதுமான ஒரு பிண்ட3ரூபத்தை பெற்றெடுத்தாள்.

4) அவ்யக்தம் முநித3ம்பதீ கிமித3மித்யுத்ஸ்ருஜ்ய வேத்ரே க3தௌ
க3ர்ப்பே4ாऽதே2ந்தி3ரயா ஸமஸ்த ஜக3தாம் த4ாத்ரா பு4வா சேக்ஷித; |
ஸம்பூர்ணஸ் ஸகலாங்க3துங்க3ஸூஷமஸ்ஸ்தன்யாபி4லாஷா த்3ருதே
தத்தாத்3ருக்3 ஜக3தீ3ஶ தி3வ்யகருணாது3க்3தே4ந வ்ருத்3தி4ம் க3த: ||

அம்முநித3ம்பதிகளும் "இதுவென்" என்று ஒன்றும் புலப்படாத அப்பிண்ட3த்தை ஒரு பிரப்பம்புதரில் எறிந்துவிட்டுச் சென்றனர். பின்பு அந்த பிண்ட3ம் அனைத்துலகங்களையும் த4ரிப்பவனான எம்பெருமானாலும், பெரிய பிராட்டியாராலும் பூ4மிப்பிராட்டியாராலும் கடாக்ஷிக்கப்பட்டதாய், ஸர்வாவயவங்களும் பரிபூர்ணமான ஓர் ஆண்குழந்தையாகப் பரிணமித்து, ஸ்தந்யபாநத்தில் ஆசையின்றி ஜக2ந்நாத2ப் பெருமானின் தி3வ்ய கருணையால் வளர்ச்சியடைந்தது.

5) தே3வஸ்ய ஸ்வயமேவ த3ர்ஶிதவதோ தி3வ்யம் ஸ்வகீயம் வபு:
விஶ்லேஷேண ருத3ந்தமேத்ய ஶிஶுகம் ஶ்ரீமத் ஸமாக்2யோ நர: |
க்3ருஹ்ணந் வேத்ர க்ருது3த்3க3ாதி புலகோ ஹ்ருஷ்ட: ஸ்த்ரியை நாமத:
ஶ்ரீமத்யை ஸமத3ாத3ஸௌ ச ஜக்3ருஹே ஹ்ருஷ்டாநபத்யாऽசிரம் ||

அவ்வாறு எம்பெருமான் தனது திருமேனியைத் தானாகவே காட்டி மறைய, அக்குழந்தையான திருமழிசையாழ்வாரும் எம்பெருமானின் பிரிவால் அழலானார்.

அவ்வமயம் அங்கு வந்த திருவாளன் என்னும் பிரம்பறுப்பாளன் அழும் குழந்தையைக் கண்டு மயிர்க்கூச்சும், மகிழ்ச்சியும் கொண்டவனாய், அத்தை எடுத்துச் சென்று தன் மனைவியான பங்கயச்செல்வியிடம் கொடுத்தான். பிள்ளைபேறற்ற அவளும் மகிழ்ந்தவளாய் உடனே அக்குழந்தையை எடுத்துக் கொண்டாள்.

6) உல்லோகஸ்த2 ஶிஶுப்ரசாரமமுகம் த்3ருஷ்ட்வா மஹீஸாரகே3ா
வ்ருத்3த4ஶ்ஶுத்ரவரோ ஹ்யபத்ய விது3ரோ ஜாயாஸஹாய: பய: |
ஆத3ாயார்த்த2யதே ஸ்ம ஸோऽபி க்ருபயா தஸ்மிந் பபௌ தத்பய:
ஶிஷ்டம் தத்பிப3தம் ஸுதோ ப4வதி வாமித்யாஹ ஸத்யாஶிஷம் ||

அக்குழந்தை உலக வழக்கிற்கு மாறாக பசிதாகம் இல்லாமல் வளர்ந்து வருவதைக் கேள்வியுற்று, பிள்ளைபேறற்றவனும், திருமழிசையில் நித்யவாஸம் செய்பவனும், சதுர்த்த2வர்ணத்தில் பிறந்தவனும், அறிவாளியுமாகிய ஒரு முதியவன் பாலமுது காய்ச்சி எடுத்துக்கொண்டு, தன் மனைவியோடு ஆழ்வார் இருந்தவிடத்தே வந்து ஸமர்ப்பித்தான். ஆழ்வாரும் அவனிடத்தில் க்ருபையாலே அவன் கொண்டு வந்த பாலமுதை அமுது செய்தார். பின்பு "அடியேன் அமுது செய்து ஶேஷித்த பாலை நீங்கள் பருகுங்கள். உங்களுக்கு புத்ரன் உண்டாவான்" என்று ஆஶீர்வதி3த்தார்.

7) புத்ரோऽபூ4த் கணிக்ருஷ்ண இத்யுருகு3ணாசாரஸ்தயோர்வ்ருத்3த4யோ:
ஸ்ரீநுஸ்த்வேஷ ப்4ருகூ3த்தமஸ்ய ப4க3வத்காருண்ய ஸம்வர்தி4த: |
ஆர்ஷத்வாத3நுஸப்தமாத்து வயஸோ யோகே3 த்4ருதாஶேஷஜக3த்3
தே4தும் த்4யாதுமநாஶ்சசார ஸமயாந் ஸர்வாநக2ர்வாத்மநா ||

பின்பு அந்த முதிர்ந்த த3ம்பதிகளுக்கு நற்குணங்களும், நற்செயல்களும் நிறைந்த வனான கணிகண்ணன் என்ற ஒரு மகன் உண்டானான். ப4ார்க்க3வபுத்ரரான ஆழ்வாரும், எம்பெருமானின் கருணையால் நன்கு வளர்க்கப்பட்டவராய், ரிஷிபுத்ரரா கையாலே ஏழு திருநக்ஷத்ரத்திற்குப் பிறகு யோக3ாப்4யாஸத்திலே திருவுள்ளம் கொண்டார். அநந்தரம் யோக3த்தில் ஜக3த்காரணவஸ்துவை த்4யாநத்துக்கு விஷயமாகச் சொல்லுகையாலே அவ்வாறு த்4யாநிக்க ஸங்கல்பம் கொண்டு, அவ்வஸ்து எது என்றறியும் பொருட்டு அனைத்து ஸமயங்களிலும் புக்கு ஆராய்ந்தார்.

8) வித்$_3$வாந் வர்ஷஶதேந பா$_3$ஹ்யஸமயாந் ஸர்வாநஸாராந்வித$_3$ந்
விந்த$_3$ந்விஷ்ணுபரத்வவைதி$_3$கமதே நிஷ்ட$_2$ாம் க$_3$ரிஷ்ட$_2$ாம் த$_3$தெ$_4$ள |
தேநைவாஶ்ரிதவத்ஸலோ முரரிபுஸ்ஸ்வீயஸ்வரூபாதி$_4$கம்
லீலாபோ$_4$க$_3$விபூ$_4$தி$_3$பே$_4$த$_3$மபி ச ப்ராகாஶயத்$_3$ யோகி$_3$நே ||

வித்$_3$வானான ஆழ்வாரும் வேத$_3$ப்ராமாண்யத்தை ஏற்காத ப$_3$ாஹ்யமதங்களையும், வேத$_3$த்திற்கு அவப்பொருள் கூறும் குத்$_3$ருஷ்டி மதங்களையும் நன்கு ஆராய்ந்து அவைகள் ஸாரமற்றவைகள் என்றறிந்து, ஶ்ரிய:பதியான எம்பெருமானைப் பரனாகக் கொண்ட வைதி$_3$கமதத்தில் மிகச்சிறந்த நிஷ்டை$_2$யைக் கொண்டார். அடியணிந்தவர்களிடத்தில் வாத்ஸல்யம் கொண்ட எம்பெருமானும், அதுவே பற்றாசாக, தன்னுடைய தி$_3$வ்யாத்மஸ்வரூபம் முதலியவற்றையும், லீலா மற்றும் நித்யவிபூ$_4$திகளின் வேறுபாட்டையும் ஆழ்வாருக்குக் காட்டிக் கொடுத்தான்.

9) ஏஷ ஶ்ரீபதிநா ப்ரகாஶித ப$_3$ஹுத்ரையந்த பர்யந்ததீ$_4$:
ஸ்வாநர்த்த$_2$ாந் த்$_3$ரவிட$_3$ ப்ரப$_3$ந்த$_4$வித$_4$யா நிர்மாய ஶர்மாவஹாந் |
லோகாநாம் ஜக$_3$தீ$_3$ஶ்வரம் க்ஷிதிரமாநாத$_2$ம் ஸத$_3$ா சிந்தயந்
ப்$_3$ருந்த$_3$ாரண்ய உவாஸ ஸப்தஶதகம் வர்ஷம் க$_3$ஜேந்த்$_3$ரஹ்ரதே$_3$ ||

திருமகள்கொழுநனாகிய எம்பெருமானால் நன்கு தெரிவிக்கப்பட்ட மிகுந்த வேத$_3$ாந்த ஜ்ஞாநத்தை உடையவரான இவ்வாழ்வார் உலகங்களுக்கு நன்மை விளைவிக்கக்கூடியதான தான் பெற்ற அர்த்த$_2$விஶேஷங்களைத் தமிழ்ப்ரப$_3$ந்த$_4$ங்களாக இயற்றி, ஸ்ரீதே$_3$வீ மற்றும் பூ$_4$தே$_3$வீ மணாளனான ஜகந்நாத$_2$ப் பெருமானை எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டு, ப்$_3$ருந்த$_3$ாரண்யக்ஷேத்ரத்தில் (திருவல்லிக்கேணியில்) க$_3$ஜேந்த்$_3$ரஸரஸ்ஸின் கரையில் 700 திருநக்ஷத்ரங்கள் எழுந்தருளியிருந்தார்.

10) தத்தாத்$_3$ருக்கமலாஸக$_2$ஸம்ருதி மஹாSSநந்தை$_3$ரமந்த$_3$ாயிதம்
கந்த$_2$ாஸீவநப$_3$ந்து$_4$ரம் த்ரிணயந: பஶ்யந் ம்ருட$_3$ாந்யா ஸஹ |
மத்தஸ்த்வம் வரமர்த்த$_2$யேதி கத$_2$யந் மோக்ஷோSஸ்த்விதி ப்ரார்த்தி$_2$த:
தத்ராஶக்தி வித$_3$ாSமுநா ஸ கதி$_2$த: ஸ்ரீசே: பத$_2$ாஸ்த்ரணம் ||

அவ்வாறு ஶ்ரிய:பதியான எம்பெருமானை நினைந்து அளவற்ற ஆநந்த$_3$ங்கொண்டவரான ஆழ்வார், ஒருநாள் கிழிந்த வஸ்த்ரத்தைத் தைப்பதில் ஈடுபட்டிருக்க, முக்கட்பிரான் மலைமகளுடன் ஆகாயமார்க்$_3$க$_3$த்திலே செல்லுகையில், ஆழ்வாரைக் கண்டு "எம்மிடமிருந்து விரும்பிய வரத்தைப் பெற்றுக்கொள்ளும்" என்று கூறினான். ஆழ்வாரும் "ஆகில் மோக்ஷத்தைத் தாரும்" என்று வேண்டி, பின் அவ்விஷயத்தில் அவனது இயலாமையை அறிந்து "இவ்வூசியின் பின்னே நூல்வரும்படி வரம் தருவாய்" என்று இகழ்ச்சியாய் ருத்$_3$ரனை நோக்கிக் கூறினார்.

11) ருத்$_3$ரோ ரௌத்$_3$ரஜுஷா ப்ரஹாஸப$_4$வயா ருஷ்டோ நிடாலாக்$_3$நிநா
ஸம்ஸ்ப்ரஷ்டும் முநிபுங்க$_3$வம் க்ருதமதிஸ்தஸ்யாக்$_3$ர பாத$_3$ாக்$_3$நிநா |
ஜ்வாலாஜாலவிலாபிதத்ரிஜக$_3$தா ஸந்தாபிதோ வாரிதை$_3$:
வர்ஷந்நிர்வித$_3$மாகலய்ய ப்$_4$ருகு$_3$ஜம் தம் ப$_4$க்திஸாரம் ஜகெ$_3$ள ||

அப்பரிஹாஸவார்த்தையினின்றும் உண்டான கோபத்தால் ருத்$_3$ரன் தன் நெற்றிக்கண் நெருப்பு மூலமாக முநிஶ்ரேஷ்ட$_2$ரான ஆழ்வாரைத் தீண்ட நிஶ்சயித்து, அவ்வாறே தன் நெற்றிக்கண்ணைத் திறந்துவிட, அக்கண்ணில் நின்றும் காலாக்$_3$நியானது கிளர்ந்தெழுந்தது. அதைக் கண்டு ஆழ்வாரும் தம்முடைய வலது திருவடியின் பெருவிரலிலே ஒரு கண்ணைத் திறந்து விட, அதினின்றும் மூன்றுலகங்களையும் தனது ஜ்வாலைக் கூட்டங்களால் துன்புறுத்துவதான பெருந்தீ கிளம்பியது. ருத்$_3$ரனும் அந்த அக்$_3$நியால் மிகவும் தாபங்கொண்டவனாய், அதைப் புஷ்கலாவர்த்தகம் என்கிற ப்ரளயகாலமேக$_4$ங்களால் தணித்து, அப்பெருத்த மழையிலும் சிறிதும் சலியாமல் எம்பெருமானையே அநுப$_4$வித்துக் கொண்டிருந்த ஆழ்வாரைக் கண்டு வியப்புற்று, அவரை "ப$_4$க்திஸாரர்" என்று போற்றிப் பாடினான்.

12) கஶ்சித்$_3$ வ்யாக்$_4$ரசரோऽந்தரிக்ஷ க$_3$மநஸ்தம் ஶுக்திஹாராபி$_4$ த$_4$:
ப்ராப்ய ஸ்தம்பி$_4$த நைஜயாநக$_3$மனஸ்ஸ்வம் வாரவாணம் தி$_3$ஶந் ।
ஸத்$_3$யஸ்தத்க்ருத ரத்நகஞ்சுகத்$_3$ருஶா ஹ்ரீண: ஸ்வஹாரம் த$_3$த$_3$த்
தத் பத்$_3$மாக்ஷமயீம் ஸ்ரஜம் மணிமயீம் பஶ்யந் ஸ்துவந்நிர்க$_3$த: ॥

பின்பு ஆழ்வார் யோக$_3$த்தில் எழுந்தருளியிருக்கையில் ஶுக்திஹாரன் என்ற ஒரு ஸித்$_3$த$_4$ன், புலியை வாஹநமாகக் கொண்டு ஆகாயமார்க்க$_3$மாய்ச் செல்லுகையில், ஆழ்வாருடைய யோக$_3$ப்ரப$_4$ாவத்தாலே அவ்வாஹநம் அவர் மேல் போகாமல் தடைபட்டு நிற்க, அவனும் ஆஶ்சர்யத்துடன் ஆழ்வாரிடத்தே வந்து அவருக்கு ஒரு கவசத்தைக் கொடுத்தான். ஆழ்வாரோ அதை ஏற்காது, உடனே ஸ்வஸங்கல்பத்தால் ஒரு மணிமயமான கவசத்தை அவனுக்குக் காட்ட, அவனும் அதைக்கண்டு வெட்கமடைந்தவனாய், தன் கழுத்திலிருந்ததொரு மணிமாலையைக் கொடுக்க, இவரும் தன் கழுத்திலிருந்து ஒரு தாமரைமணிமாலையை எடுத்துக்காட்ட அது நவரத்நமயமாய் விளங்கக்கண்டு, அவனும் இவர் வைப$_4$வத்தைக் கொண்டாடி யத$_2$ாஸ்தாநமே சென்றான்.

13) நாம்நா கோங்கணஸித்$_3$த$_4$ இத்யதிதராம் க்$_2$யாதோ முநீந்த்$_3$ரம் க$_3$த:
லேஶோநாபிச கோடிவேத$_4$நபடும் ஸைத்$_3$த$_4$ம் ரஸம் தர்ஶயந் ।
தத்$_3$த$_3$த்தம் ஶதகோடி வேத$_4$ந சணம் கிட்டம் பரீக்ஷ்ய ஶ்ருதே;
ப்ரீதஸ்தம் கு$_3$ணரத்நரோஹண கி$_3$ரிம் ஸஸ்மார விஸ்மாபித: ॥

பின்பும், கொங்கணஸித்$_3$த$_4$ன் என்ற பெயரால் மிகவும் ப்ரஸித்$_3$த$_4$னான ஒரு ரஸவாதி$_3$, ஆழ்வார் இருந்தவிடத்தே வந்து தன் ஸித்$_3$தி$_4$யால் உண்டானதும் சிறுதுளியால் காணிகோடியை பிளக்கவல்லதுமான ஒரு ரஸகுளிகையைக் காட்ட, ஆழ்வாரும் அதை திரஸ்கரித்து, தம் காதில் குறும்பியை உருட்டி 'இது கோடாகோடியை பே$_4$தி$_3$க்கவல்லது' என்று கொடுத்தருள, அவனும் அதை ஶோதி$_3$த்துப் பார்த்து அப்படியே இருக்கக்கண்டு வியப்புற்று, மிகவும் மகிழ்ந்தவனாய் ஆழ்வாரை பல அற்புதகுணரத்நங்கள் நிறைந்த குன்றாய் நினைத்தான்.

14) ஶ்ரீபூ$_4$ஸாரபுரீந்த்$_3$ர தி$_3$வ்யமஹஸாம் ராஶிம் ஸூதூ$_3$ரோஜ்ஜ்வலம்
த்$_3$ருஷ்ட்வா ஸாரஸபூ$_4$தயோகி$_3$ மஹத$_3$ாக்யாநா: ப்ரஹ்ருஷ்டாக$_3$தா: ।
ப்ருஷ்ட்வா க்ஷேமமிமே ஸுயுக்தகுஶலாஸ்தேநாபி தேந்யோந்யத:
நேமுர்மோத$_3$ஜப$_3$ாஷ்பஶீதலத்$_3$ருஶஸ்த்வாமந்த்ரய தம் தே க$_3$தா: ॥

அநந்தரம், திருமழிசையாழ்வார் ஒரு கு$_3$ஹையில் புக்கு யோக$_3$த்தில் எழுந்தருளியிருக்கையில், இவரது தி$_3$வ்யமான திருமேனியின் ஒளிக்கூட்டமானது, வெகுதூரம் ப்ரகாஶிக்க, அதைக்கண்டு வியந்து, பொய்கையார், பூதத்தார், பேயாழ்வாராகிற முதலாழ்வார்கள் அவ்விடத்தை அடைந்து குஶலப்ரஶ்நம் பண்ண, ஆழ்வாரும் 'முநிகாள்! நன்றாய் இருக்கிறீர்களோ' என்று வினவியருள, பின்பு ஒருவருக்கொருவர் தண்டனிட்டு, ஆநந்தக்கண்ணீர் பனிப்ப மிகவும் ப்ரீதியுடன் சில காலம் யோக$_3$த்தில் எழுந்தருளியிருந்தனர், அதன் பின் அவர்கள் ப$_4$ார்க்க$_3$வ முநீந்த்$_3$ரரிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றனர்.

15) தீராத் கைரவிணீ ஸரோவரமணேராக$_3$த்ய பூ$_4$ஸாரகம்
ம்ருத்ஸ்நாயா அலப$_4$ாகுலஶ்ஶுசிம்ருத$_3$ஸ்ஸ்த$_2$ாநம் வ்ருஷாத்$_3$ரீஶ்வராத் ।
ஸ்வப்நே ப்ராப்ய ம்ருத$_3$ம் ஸிதாம் ப்ரஹ்ருஷிதோ க்$_3$ருஹ்ணந் தநௌ த$_4$ாரயந்
ஶ்ரீஸத்யவ்ரதநாமதி$_3$வ்யநக$_3$ரீம் ப்ராபத்$_3$ப்$_4$ருகே$_3$ார்வம்ஶஜ: ॥

பின்பு ப$_4$ார்க்க$_3$வபுத்ரர் திருவல்லிக்கேணியிலிருந்து திருமழிசைக்கெழுந்தருளி சாத்திக்கொள்வதற்குத் திருமண் வேண்டிச் சோதித்த இடத்தில் திருமண் அகப்படாமல் கலக்கமுற, அப்பொழுது ஸ்வப்நத்தில் திருவேங்கடமுடையானிடமிருந்து திருமண் இருக்குமிடத்தை அறிந்து, அங்கே சென்று, ஶுத்தமான திருமண்ணைக் கண்டு, மிகவும் களித்து, அதை எடுத்துத் திருமேனியில் த$_4$ரித்துக்கொண்டு, ஸத்யவ்ரதக்ஷேத்ரம் என்று பெயருடைத்தான காஞ்சீமாநகரை அடைந்தார்.

16) க$_3$த்வா தத்ர யதே$_2$ாக்தகாரிசரணத்$_3$வந்த்$_3$வம் ப்ரணம்யாத$_3$ராத்
த்$_4$யாயந் தத்ர ச ஸப்தவர்ஷஅதகம் தஸ்தெ$_2$ள முநீந்த்$_3$ரோ முத$_3$ா ।
தத்ர ஶ்ரீகணிக்ருஷ்ணகே முநிவரம் ஸம்ஸேவ்யமாநே ஸத$_3$ா
வ்ருத்$_3$த$_4$ா காசந ரங்க$_3$வல்லி முக$_2$யா ஶுஶ்ரூஷயாஸேவதா ॥

அவ்வாறு ப4க்திஸாரர் கச்சிவெஃகாவிற்கு எழுந்தருளி யதே2ாக்தகாரி எம்பெருமானின் திருவடியிணையை ஆத3ரத்துடன் ஸேவித்து, ஈடுபாட்டுடன் த்4யாநம் செய்து கொண்டு 700 வருட காலம் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது கணிகண்ணன் ஆழ்வாரை ஆஶ்ரயித்து, எப்பொழுதும் அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டிருக்க, ஒரு மூதாட்டியும் ஆழ்வார் திருவடிகளில் ப4க்தியுற்று, அவர் இருந்த இடத்தைத் திருவலகிடுதல், மெழுகுதல், கோலமிடுதல், முதலிய கைங்கர்யங்களை செய்து வந்தாள்.

17) தஸ்யை தி3வ்யத3யாரஸேன ப4ரித: ஶ்ரீப4க்திஸாரோ முனி:
பீநோத்துங்க3குசத்3வயம் ரதிபதேஸ்ஸர்வஸ்வஸர்வாங்க3கம் |
தாருண்யம் ஸமத3ாத்தயா முதி3தயா ராஜாऽபி லஜ்ஜாபித:
தச்சி2ஷ்யம் கணிக்ருஷ்ணமுஞ்ச2நபரம் யோகீ3ந்த்3ரமாகாரயத் ||

ப4க்திஸாரமுநிவரும் த3யாரஸம் நிரம்பியவராய் அக்கிழவிக்குப் பெருத்த முலைத்தடங்களையும், மிக அழகிய அங்க3ங்களையும், யௌவநத்தையும் கொடுத்தருளினார். அவளும் மிகவும் மகிழ்வுற்றிருக்க அந்நாட்டரசனான பல்லவராயன் அவளைக்கண்டு காமுற்று, மணஞ்செய்து வாழ்ந்திருக்கையில், நாளுக்கு நாள் தனது இளமைப்பருவம் நீங்குவதையும், அவளது பருவம் மாறுபடாதிருப்பதையும் கண்டு வியந்து, அதற்குக் காரணம் ஆழ்வாருடைய வரப்ரஸாத3மே என்றறிந்து, அவ்வருளைத் தானும் பெறுவதற்காக உஞ்ச2வ்ருத்தி செய்பவனும், ஆழ்வாரின் ஶிஷ்யனுமான கணிகண்ணனைத் தன்னிடத்திற்கு வரவழைத்தான்.

18) ராஜ்ஞா தேந சிரம் முநீந்த்3ரசரணாஸக்தஸ்ஸ நிர்ப3ந்தி4தோ
நிஷ்க்ரம்யார்யவராய வ்ருத்திமமுகாமாவேத்3ய சாமந்த்ர்ய ச |
ஸாகம் யோகி3வரேண பந்நக3ஶயேநாத்4யேந பும்ஸா ஸமம்
ஸர்வைர்தே3வவரைஸ்ஸஹைவ நிரக3ாத்ஸாந்த்3ரம் தமோऽபூ4த்புரே||

ப4ார்க்க3வமுநிவரின் திருவடிகளில் ஈடுபட்ட கணிகண்ணன் “உம் ஆசார்யரை நம் பக்கல் அழைத்துக்கொண்டு வாரும்” என்று பல்லவ அரசனால் நிர்ப3ந்தி4க்கப்பட, அவனும் அதை மறுத்து, அங்கிருந்து புறப்பட்டு ஆழ்வாரிடம் சென்று நடந்த செய்தியை

விண்ணப்பஞ்செய்து அடியேனுக்கு இங்கிருந்து செல்ல விடைதந்தருள வேண்டும் என்ன, ஆழ்வாரும் எம்பெருமானுடன் புறப்பட நிஶ்சயிக்க, கணிகண்ணன் ஆழ்வாருடனும், ஆதிபுருடனான யதே2ாக்தகாரி எம்பெருமானுடனும், அனைத்து தே3வதைகளுடனும், அந்நகரத்தை விட்டு வெளியேறினான். அதனால் அந்நகரத்தில் உத3யாஸ்தமயங்கள் தெரியாதே, கனத்த இருள் உண்டானது.

19) ராஜா பல்லவநாமகஸ்ஸசிவைஸ் ஸம்மந்த்ர்ய யோகீ3ஶ்வரம்
வந்தி3த்வா ஸுசிரம் ப்ரஸாத்3ய ப3ஹுதா4 ஶிஷ்யேண ஸாகம் கு3ரும்|
ஸார்த்த4ம் தே3வவரேண வார்த்தி4தநயா காந்தேந ஸர்வைஸ்ஸமம்
காஞ்சீம் ப்ராபிதவாந்புரீம் அத2 யத2ாபூர்வம் புரம் நிர்ப3பெ4ள ||

பல்லவராய அரசனும் மிகவும் கவலையுற்று, தன் மந்த்ரிகளுடன் ஆலோசித்து கணிகண்ணன், ஆழ்வார் முதலியோர் உள்ள இடத்தைத் தேடி அடைந்து, ஆழ்வார் மற்றும் கணிகண்ணன் திருவடிகளில் விழுந்து தனது அபசாரத்தை மன்னித்தருளுமாறு பலவாறு வேண்டி, கணிகண்ணனுடனும், திருமகள் கொழுநனான எம்பெருமானுடனும், மற்றனைத்து தே3வர்களுடனும், ஆழ்வாரைக் காஞ்சி நகரத்திற்கு அழைத்து வந்தான். பின்பு அந்நகரம் முன்போலவே பொலிவு பெற்றது.

20) காவேரீவ்ருத கும்ப4கோணநக3ரம் ப்ராப்தும் ஸமுத்கண்ட2யா
க3ச்ச2ந் வ்யாக்4ரமஹாபுரே க்வசித3பி ப்ராந்தே க்3ருஹஸ்ய ஸ்தி2த:|
த்3ருஷ்ட்வா ஸ்வம் விநிவ்ருத்தவேத3பட2நாந்விப்ராந் வ்யபேத ஸ்ம்ருதீந்
க்ருஷ்ணவ்ரீஹிநக2க்ஷதைர்நிபுணயந் தஸ்தெ2ள தத3ாராதி4த: ||

பின்பு ஆழ்வார் திருக்காவிரி பாயும் திருக்குடந்தை (கும்ப4கோணம்) தி3வ்யதே3ஶத்தை அடைய பெருத்த ஆவலுடையராய், பெரும்புலியூர் என்ற க்3ராமத்தில் ஒரு வீட்டு வாசற்திண்ணையில் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது அங்கு வேத3ாத்4யயநம் பண்ணுகிற ப்3ராஹ்மணர்கள் ஆழ்வாரை தாழ்ந்த சாதியினராக எண்ணி, அத்4யயநத்தை நிறுத்திவிட, பின்பு அவர்களுக்கு விட்ட இடம் தோன்றாமல் தடுமாற, ஆழ்வாரும் அதைக் கண்டு, கறுப்பு நெல்லை நகத்தாலே பிளந்து, குறிப்பாலே

"க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நக2நிர்பி4ந்நம்" (யஜுஸ்ஸம்ஹிதை 1-8-9) என்ற வாக்யத்தை உணர்த்தியருள, அவர்களும் ஆழ்வாரை தண்டனிட்டு உபசரித்தனர்.

21) யாம் யாம் யாதி தி3ஶம் முநிர்முரரிபுஸ்தஸ்யாமபூ4த் ஸம்முக2:
தத்3 த்3ருஷ்ட்வாऽத்3பு4தமக்3ரஜா அபி விபே4ரார்ச்சாஸ்வப4வாதி3கம்।
தத்3க்3ராமேஶவரதீ3க்ஷிதாய ஜக3து3ஸ்தேநாக்3ரபூஜார்பணாத்
ஈஜேக3ர்விதது3ர்மதாந் ப்ரஅமயந் ஸ்வாந்தஸ்த2லக்ஷ்மீப்4ருதா ॥

மேலும் அப்பெரும்புலியூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான், ஆழ்வார் உபாத3ாநத்திற்காக எந்தெந்த தி3ஶையை நோக்கிச் சென்றனரோ, அந்தந்த முக2மாகத் திரும்பியருளினான். அர்ச்சாமூர்த்தியின் இவ்வற்புதச் செயலை அக்கோயில் அர்ச்சகர் கண்டு சில ப்3ராஹ்மணர்களுக்குக்காட்ட, அவர்களும் அதைக்கண்டு, அப்பொழுது யாக3ம் செய்து கொண்டிருந்த அவ்வூர்த்தலைவரான பெரும்புலியூரடிகளிடம் கூறினர். அதைக் கேட்டவுடன் தீ3க்ஷிதரும் மிக்க மகிழ்ச்சியோடு வந்து, ஆழ்வாரை எதிர்கொண்டழைத்து அவருக்கு அக்3ரபூஜையைச் செய்தார். யாக3த்தில் பங்கு வஹிக்கும் ருத்விக்குகள் அதை ஸஹியாமல் பழிக்கத் தொடங்க, தீ3க்ஷிதரும் அந்த து3ர்மதிகளை அடக்க எண்ணி, ஆழ்வாரை வேண்ட, அவரும் அந்தர்யாமியான எம்பெருமானை தன் திருமார்பிலே அனைவரும் கண்டநுப4விக்கும்படிச் செய்ய, அந்த ருத்விக்குகளும் எம்பெருமானுடைய தி3வ்யமங்களவிக்3ரஹத்தைக் கண்ணார ஸேவிக்க, அந்த தீ3க்ஷிதரும் யாக3த்தை தொடர்ந்தார்.

22) க3த்வைஷோऽப்யத2 கும்ப4கோண நக3ரம் தத்ராஹிபே4ாகே3ஶயம்
ஸம்ஸேவ்ய ஸ்வஶுபே4ாக்திகோஶஶதகம் மாருத்3வ்ருதாம்ப4ஸ்ஸு தம்।
க்ஷிப்த்வாऽப்4யாக3த கோஶயுக்3மமசிராத்3 க்3ருஹ்ணந் ஜக3ஜ்ஜீவயந்
தத்ரோத்த2ாநஅயம் ஹரிம் விரசயந் தேநாதிஸம்மாநித: ॥

பின்பு ஆழ்வார் திருக்குடந்தை திவ்யதே3ஶத்தை அடைந்து அங்கு திருவநந்தாழ்வான் மீது திருக்கண்வளர்ந்தருளும் ஆராவமுதனை நன்றாக ஸேவித்து, தமது நூற்றுக்கணக்கான ப்ரப3ந்த4ங்களின் ஸ்ரீகோஶங்களைத் திருக்காவிரியின்

ஜலப்ரவாஹத்தில் எறிந்து விட, மற்ற ப்ரப3ந்த4ங்களெல்லாம் வெள்ளத்தோடு செல்லும்போது, நான்முகன் திருவந்தாதி, திருச்சந்தவிருத்தம் என்னும் இரு தி3வ்யப்ரப3ந்த4ங்கள் மாத்திரம் ப்ரவாஹத்தை எதிர்த்து வர, ஆழ்வார் அவ்விரு தி3வ்யப்ரப3ந்தங்களைச் சடக்கென எடுத்து, உலகம் உய்வதின் பொருட்டு உபகரித்தருளினார். பின்பு ஆராவமுதனது ஶயநத்திருக்கோலத்தைக் கண்டு "காவிரிக் கரைக் குடந்தையுள் கிடந்தவாறெழுந்திருந்து பேசு" (திருச்சந்த - 61) என்று விண்ணப்பம் செய்ய, எம்பெருமானும் ப4க்தபரதந்தரனாகையாலே, அர்ச்சாவதார வரம்பைக் கடந்து எழுந்திருக்கப் புக, ஆழ்வாரும் அந்த நீர்மைக்குத் தோற்று, "வாழி கேசனே" என்று மங்களாஶாஸநம் பண்ண, எம்பெருமானும் எழுந்திருக்க முற்பட்ட அந்த உத்தாநஶாயித் திருக்கோலத்துடனே ஸேவை ஸாதி4த்தருளினான். மேலும் ஆழ்வாருக்குத் திருமழிசைப்பிரான் என்று திருநாமம் வரும்படிச் செய்து கெ3ளரவித்தான்.

23) தத்ரைவம் த்ரிஶதோத்தரம் ஸ ஶரத3ாம் யோகே3 ஸஹஸ்ரத்3வயம்
ஸ்தி2த்வா தி3வ்யவசஸ்ஸுதா4ல ஹரிபி4ஸ்ஸர்வம் ஜக3த்3வர்த4யந் ।
லக்ஷ்மீநாயகமேவ ஸர்வஜக3தாம் நாத2ம் ஜக3த்காரணம்
ஸர்வாத்மாநமிஹாபி ராஜிதபுரம் ஸூக்ஷ்மைருபாபீபத3த் ॥

இவ்வாறு திருமழிசைப்பிரான் திருக்குடந்தைக்ஷேத்ரத்திலே 2300 வருடங்கள் யோக3த்தில் எழுந்தருளியிருந்து, தனது தி3வ்யவாக3ம்ருதத்தால் அனைத்துலகையும் உய்வித்துக் கொண்டு இருந்தார். மேலும் திருமழிசைக்ஷேத்ரத்தில் கோயில் கொண்டவனும், அனைத்துலகங்களுக்குத் தலைவனும், ஶ்ரிய:பதியுமான எம்பெருமானே ஜக3த்காரணம் என்று நுண்ணிய யுக்திகளால் உபபாத3நம் செய்தார்.

24) பஶ்சாத்ஸுந்த3ரயோகி3வர்யப2ணிதைர்க்3ரந்தை2ஸ்ஸஹஸ்ரைஸ் த்ரிபி4:
வர்ஷைஸ்ஸப்தஶதாதி4கைர் ப்4ருகு3பதேர்வ்யக்தம் வயோ வர்ணிதம் ।
க்ஷேமாஶம்ஸநகே ஸஹஸ்ரமதி4கம் பக்ஷைஸ் தத3ர்ஹாந்வயாத்
ஸ்பர்த4ாம் தேந ஜஹாது கல்பபி4த3யா நேயாஶ்ச ருஷ்யுக்தய: ॥

பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளிச்செய்த கு3ருபரம்பராப்ரப4ாவக்3ரந்தத்தில் திருமழிசைப்பிரானின் திருநக்ஷத்ரம் 3700 வருடங்கள் என்று கூறப்பட்டுள்ளது. அவரின் வாழித்திருநாமத்திலோ "நற்புவியில் நாலாயிரத்தெழுநூற்றோன் வாழியே" என்று 1000 வருடங்கள் அதி4கமாகக் கூறப்பட்டுள்ளன. இப்படியிருப்பினும், பெரியோரின் வார்த்தைகள் கல்பபே4த3த்தினால் பொருந்தும்படிச் செய்யக் கூடியவைகளாகையால், இவ்விருபக்ஷங்களிலும் உள்ள முரண்பாட்டைத் தவிர்க்க வேண்டியது[1].

25) இத்த2ம் ஶ்ரீவரத3ார்ய தி3வ்யகருணா ஸந்து4க்ஷித ஸ்வாத்மநா
தத்தாத்3ருங் நரஸிம்ஹதே3ஶிகபு4வா தத்பாத3ஸம்ஸேவிநா |
க்3ருஹ்ணந்வீரரகூ4த்3வஹேந ரசிதம் ஸ்ரீப4க்திஸாரோத3யம்
நிர்து3க்க2ஸ்ஸுஸுகே2 ா த3த4ாதி விமதே ஶார்தூ3ல விக்ரீடி3தம் ||

இவ்வாறு ஸ்ரீவரத3ார்யரின் தி3வ்யகருணையால் நன்கு பயில்விக்கப்பட்டவரும், நரஸிம்ஹாசார்யரின் குமாரரும், அவர்களின் திருவடிகளை நன்கு பணிந்தவருமான வீரராக4வாசார்யரால் ஶார்தூ3லவிக்ரீடி3தவ்ருத்தத்தில் அருளிச்செய்யப்பட்ட "ஸ்ரீப4க்திஸாரோத3யம்" என்ற இந்நூலைப் பயில்பவன் து3க்கமேதுமின்றி மிகுந்தஸுக2த்துடன் பரமதத்தில் புலி போன்ற க3தியுடையவனாவான்.

1) தற்போது கிடைக்கும் ஆறாயிரப்படிகு3ரு3பரம்பராப்ரப4ாவ பதிப்புகளில் திருமழிசையாழ்வார் 4700 திருநக்ஷத்ரங்கள் எழுந்தருளியிருந்ததாகக் காணப்படுகிறது. ஆனால், அண்ணாவப்பங்கார் ஸ்வாமி மேலேயுள்ள 24ம் ஶ்லோகத்தில், பின்பழகியபெருமாள்ஜீயரின் க்3ரந்த2த்தின்படி திருமழிசையாழ்வார் 3700 திருநக்ஷத்ரங்கள் எழுந்தருளியிருந்ததாக உல்லேகி2த்துக் கூறுவதால், அக்காலத்திலிருந்த தாளபத்ரஸ்ரீகோஅங்களில் 3700 திருநக்ஷத்ரங்கள் என்றிருந்திருக்கக்கூடும். வாழித்திருநாமத்தைக்கண்டு பின்புள்ளார் அதனை 4700 ஸம்வத்ஸரங்கள் என்று மாற்றியிருக்கக்கூடும் என்று தோன்றுகிறது.

வரணபஞ்சவிம்ஶதி: - பொழிப்புரை

முன்னுரை

வரணபஞ்சவிம்ஶதி : என்ற இந்த நூல் திருமழிசை அண்ணாவப்பங்கார் என்ற வாதூ4ல வீரராக4வாசார்யரால் இயற்றப்பட்டது என்பது இந்நூலின் கடைசி ஶ்லோகத்தால் அறியப்படுகிறது.

ந்யாஸத்தின் ஸ்வரூபம் முதலானவற்றை விவரிப்பதாக ஸ்வாமி தே3ஶிகரால் ந்யாஸவிம்ஶதி இயற்றப்பட்டது போல. அத்திகி3ரிப் பேரருளாளனை விளித்து ஶரணவரணத்தின் ஸ்வரூபம் முதலானவற்றை நன்கு ஆராய்ந்து 25 ச்லோகங்களைக் கொண்ட இந்நூலும் இயற்றப்பட்டுள்ளது. ஆகவே இந்நூல் 'வரணபஞ்சவிம்ஶதி': எனப்படுகிறது.

1) வரணோபாயப4ாவஸ்ய வக்தும் நிரவகாஶதாம் |
நிபி3ரீஸௌ கரீஶஸ்ய சரணௌ நித3தே4 ஹ்ருதி3 ||

ஶரணவரணமான ப்ரபத்திக்கு உபாயத்வமில்லை என்று கூறுவதற்காக அத்திகி3ரிப்பேரருளாளனுடைய இடைவெளியில்லாத திருவடிகளை உள்ளத்தால் நினைக்கிறேன். இடைவெளியில்லாத என்றதால் மற்ற உபாயங்களின் அந்வயத்தை ஸஹியாதவை என்று பொருள் தேறுகிறது.1

---

1. திருமந்த்ரார்த்த2ம் - ஸூத்ரம் 145ன் வ்யாக்யானம்

"சரணௌ" என்று இரண்டு திருவடிகளையும் சொல்லுகிற இத்தால்,.... சேர்த்தியழகையும், த்3விவசனம் இரண்டுக்கு மேல் மற்றொன்று புகுர ஸஹியாமையாலே ஸஹாயாந்தர நிரபேக்ஷமான உபாயபூர்த்தியையுஞ் சொல்லுகிறது.

2) ப2லாயந்த்யாம் ப்ரீதௌ கரிகி3ரிபதேர் யந்நிருபமம்
நித3ாநம் ஸௌஹார்தே3ऽபி ச ப2லதயா யத்ப்ரணிஜகு3: |
உபாஸாந்யாஸாப்4யாம் ததி3த3மநவாப்யா(ப்தா) த்மவிப4வம்
ப்ரஸஜ்யோபாயம் நஶ்ஶரணவரணம் ப்ராபயதி ஸ: ||

ஶரணவரணம் = எம்பெருமானே உபாயம் என்ற ஜ்ஞானம். சேதனனுடைய லாப4த்திற்குக் காரணமான ப4க3வத்ப்ரீதிக்கு ஸாத4நமான கர்ம, ஜ்ஞான, ப4க்தி முதலான த்யாஜ்யங்களான உபாயங்களைக் காட்டிலும் வேறானதாய், அந்த ப்ரீதிக்கு ஆதி3காரணமாய், ஆஶ்ரிதர்க்கு அபி4மதமான ஶ்ரேயஸ்ஸுக்களில் எம்பெருமான் அளிக்கும் ப2லமாய், உபாஸநத்தாலோ, ந்யாஸத்தாலோ அடையமுடியாத தன் பெருமையை உடையதாய், எம்பெருமானுக்கே அடிமை என்ற ஜ்ஞானமுடைய ஸித்3தே4ாபாயத்தின் அநுஷ்டானரூபமான ஶரணவரணத்தை எம்பெருமான் தன் நிர்ஹேதுக க்ருபையாலே[1] நம்மையடைவிக்கிறான். யாத்3ருச்சிகமான ஸுக்ருதம் முதலானதால் அல்ல.

குறிப்பு :- ப்ரபத்தி நிஶ்சயமாகப் பலனளிப்பது. ஸுலப4மாகச் செய்யக்கூடியது. ஆத்மாவின் பாரதந்த்ர்ய ஸ்வரூபத்துக்கு ஒத்ததாயிருப்பது.

1) முமுக்ஷுப்படி 223, 225 ஸூத்ரத்தின் வ்யாக்2யானம்
"ஸ்வீகாரந்தானும் அவனாலே வந்தது."
"அதுவும் அவனது இன்னருளே."

"உணர்விலும்பரொருவனை அவனதருளால் உறற்பொருட்டு என்னுணர்வினுள்ளே யிருத்தினேன்" (திருவாய்மொழி 8-8-3) என்று ..... தம்முடைய ஸ்வீகாரத்தை அருளிச் செய்த அநந்தரம் "அதுவுமவனதின்னருளே" என்று அந்த ஸ்வீகாரந்தானும் அவனுடைய நிர்ஹேதுக க்ருபையினாலே உண்டானது என்று ஆழ்வார் அருளிச்செய்கையாலே, ஸ்வீகாரமும் அவனுடைய க்ருஷிப2லமென்றே கொள்ளவேணும்.

3) கெ3ளணம்முக்2யமிதீவ யச்ச்2ருதிக3ணைர்கூ3ட4ாஶயைராஶ்ருதம்
ந்யாஸோபாஸநநாமகீர்த்தநமுக2ம் நாநாவித4ம் ஸாத4நம் |
தத்ர க்வாபி கத3ாऽப்யலப்3த4 நியமாஸ்தத்(த்வத்)பாரதந்த்ர்யாஶ்ரயா:
ஸ்வீகர்த்தும் வரத3! ஶ்ரியோ க4டகதாம் நிஶ்சிந்வதே ப4ாவுகா: ||

எத்தனை அதி4கமான ஜ்ஞானமுடையவர்களாலும் அறியமுடியாத தாத்பர்யமுடைய வேத3ஸமூஹத்தாலே ந்யாஸம், உபாஸநம், திருநாமஸங்கீர்த்தனம் முதலியதாய் நேரிடையாகவும், பரம்பரையாகவும், முக்2யமாயும், அமுக்2யமாயுமுள்ள பல ஸாத4நங்கள் கூறப்பட்டதோ, அவ்வுபாயங்களில் ஒன்றிலும் எக்காலத்திலும் நிஷ்டை2யில்லாதவர்களாய், அதாவது எம்பெருமானைத் தவிர வேறு உபாயமில்லாதவர்களாய், எம்பெருமானுக்குப் பரதந்த்ரரான ஜ்ஞானிகள் பிராட்டியைப் புருஷகாரமாக ஸ்வீகரிக்க நிஶ்சயிக்கிறார்கள்[1]. ந்யாஸ வித்3யைக்குப் புருஷகாராபேக்ஷையில்லாமையால் அது புருஷகாராபேக்ஷையுள்ள ஶரணவரணத்தைவிட வேறுபட்டது என்று கருத்து.

4) ஸித்3தே4ா பாயாதி4காரஶ்ஶரணவரணதீ4ஸ்தத்ர சௌந்முக்2யமாத்ரம்
பர்யாப்தோऽஸ்யாதி4காரோ க4டகவிஷயகஸ்தேந நாதிப்ரஸங்க3: |
யா த்3ருஷ்டா தத்ப்ரபத்திஸ்ஸம்ருதிஷு ச யதி3 வா ப4ாஷ்யகாரை : க்ருதா வா
ஸா தத்பூர்த்தயை ததே3ஷா நிருபதி4க4டநா தேவராஜஸ்ய காந்தா ||

ஸித்3தே4ாபாயத்துக்குத் தகுதி எம்பெருமானே ரக்ஷகன் என்ற ஜ்ஞாநம். அதாவது ஶரணவரணம். அந்த ஶரணவரணத்தில் ஈடுபாடே புருஷகார விஷயத்தில் போதுமான தகுதி. அதனால் எம்பெருமானுக்கு புருஷகாரம் தேவையானால், புருஷகாரத்துக்கு எது புருஷகாரம் என்ற அநவஸ்த2ா ப்ரஸங்க3மில்லை.

1. முமுக்ஷுப்படி 126
இப்போது இவளைச் சொல்லுகிறது புருஷகாரமாக.

உடையவரால் அநுஷ்டி$_2$க்கப்பட்டதும், ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டதுமான புருஷகாரவிஷய ப்ரபத்தி அதி$_4$காரபூர்த்தி ஸித்$_3$தி$_4$க்கைக்காக. ஆக, இந்த தே$_3$வப்பெருமாளின் தி$_3$வ்யமஹிஷியான பிராட்டி நிரபேக்ஷபுருஷகாரமாவாள்.

5) க்ரோடீ$_3$க்ருதாऽபி நநு நாரபதே$_3$ த்வயஸ்தே$_2$
லக்ஷ்மீருபக்ரமபதே புநரப்யுபாத்தா |
வாத்ஸல்யமுக்$_2$யகு$_3$ணவர்த்$_4$நதோऽபராத$_4$
பீ$_4$தஸ்ய மே புருஷகாரதயோபயுங்க்தே ||

ஸ்ம்ருதிகளில் கூறப்படும் ப்ரபத்தி புருஷகாரப்ரபத்தி என்று அறிவது எப்படி? எனில், த்$_3$வயமந்த்ரத்தில் பூர்வக$_2$ண்ட$_3$த்திலுள்ள நாரபத$_3$த்தில் பெரியபிராட்டியாரும் சொல்லப்பட்டிருப்பதால், எம்பெருமானுடனுள்ள அவளது ஸம்ப$_3$ந்த$_4$த்தை அறிய முடியுமானாலும், பூர்வவாக்யத்தில் 'ஸ்ரீமத்' பத$_3$த்தால் தனித்துச் சொல்லப்பட்டிருப்பதினால் பெரிய பிராட்டியார் புருஷகாரபூ$_4$தை என்று நினைவுபடுத்தப்படுகிறது. அநாதி$_3$காலமாகச் சேமித்த அபராத$_4$ங்களைக் கண்டு அஞ்சும் அடியேன் போன்ற சேதனனுக்கு, ப$_4$க$_3$வானுடைய வாத்ஸல்யம் முதலிய கு$_3$ணங்களாலன்றி நிக்$_3$ரஹம் விலகாமையால் ஆஶ்ரயணமோ, ப$_4$க$_3$வானுடைய அங்கீ$_3$காரமோ பொருந்தாமையால், இரண்டும் நிறைவேற பிராட்டியின் புருஷகாரத்வம் முதலில் அநுஸந்தி$_4$க்க உரியது. ஆகையால் எல்லாவிடங்களிலும் ஸ்ரீப்ரபத்தி புருஷகாரப்ரபத்தியாகும்.

6) அஹம்மத்ப்ராப்த்யாதி ப்ரபு$_4$க$_3$தி$_3$த நிஷ்கர்ஷவசநை:
உபாயத்வம் யத்$_3$வத்கரிஶிக$_2$ரிநாதே$_2$ வ்யவஸிதம் |
தத$_2$ா தைரேவாஸ்யா அபி க$_4$டகப$_4$ாவோ நியமித:
ப்ரமாணாநாமேஷாம் விஷயநியதிஸ்தந்த்ரவிஶதா ||

"ஶ்ரிய:பதியான நானே என்னை அடைய உபாயம். பிராட்டி புருஷகாரமென்று மஹர்ஷிகளால் சொல்லப்பட்டாள். இவளுக்கு இந்த புருஷகாரத்வம் வேத$_3$ாந்தங்களிலும்

சொல்லப்படுகிறது. எனக்கும் இதுவே ஸம்மதம். இருவருக்கும் வேறு லக்ஷணமில்லை" என்று ப$_4$க$_3$வானால் கூறப்பட்டிருப்பவைகளாய் இருவருடைய ஸ்வரூபத்தையும் நிஶ்சயிக்கும் வசனங்களால் பேரருளாளனான எம்பெருமானை உபாயம் என்று தீர்மானித்தது போல, பிராட்டி புருஷகாரபூ$_4$தை என்று தீர்மானிக்கப்பட்டாள்.[1] ப்ரபத்தியைச் சொல்லும் ஸர்வப்ரமாணங்களிலும் இந்த வேறுபாடு ஸிந்தாந்த$_3$த்தில் ஸித்$_3$த$_4$மானது.

7) கு$_3$ணாந்த்ரீநாசார்யா: கதிசித$_3$ வத$_3$ந்கேऽபி த$_3$ஶ தாந்
பரே ஸர்வாநேதாந்நிக$_3$மசதுரா: கேऽபி சதுர: |
த்$_3$விகம் சாந்யே ப்ராஹுஸ்த்வயி வரத$_3$! விஶ்வாஸஜநநே
கு$_3$ணாநாம் ஸர்வேஷாம் யத$_3$யமுபயோகே$_3$ாऽஸ்த்யபி$_4$து$_3$ர: ||

உன்னிடம் விஶ்வாஸத்தைப் பிறப்பிக்க ஸர்வஜ்ஞனாயிருப்பது, ஸர்வஶக்தியுடையவனாயிருப்பது, கருணையுடையவனாயிருப்பது என்கிற மூன்று கு$_3$ணங்கள் அநுஸந்தி$_4$க்கத்தக்கவை என்று சில ஆசார்யர்கள் கூறுகிறார்கள். மற்ற சிலர் ஶரணாக$_3$திக$_3$த்$_3$யத்தில் கூறப்பட்ட ஸ்வாமித்வ-காருண்ய - ஸௌஶீல்ய-

1) ஸ்ரீவசநபூ$_4$ஷணம் 6ம் ஸூத்ர வ்யாக்$_2$யானம்

"புருஷகாரம்" என்றும் "உபாயம்" என்றும் இவற்றை நிரூபகமாக அருளிச்செய்தது, பிராட்டிக்குப் புருஷகாரத்வமும், ஈஶ்வரனுக்கு உபாயத்வமும் அஸாத$_4$ாரணம் என்று தோற்றுகைக்காக. "மத்ப்ராப்திம் ப்ரதி ஜந்தூநாம் ஸம்ஸாரே பததாமத$_4$:| லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்தி$_3$ஷ்டா பரமர்ஷிபி$_4$:|| மமாபி ச மதம் ஹ்யேதத் நாந்யத$_2$ா லக்ஷணம் ப$_4$வேத்||" என்றும், "அஹம் மத்ப்ராப்த்யுபாயோ வை ஸாக்ஷால்லக்ஷ்மீபதி: ஸ்வயம்| லக்ஷ்மீ: புருஷகாரேண வல்லப$_4$ா ப்ராப்தியோகி$_3$நீ| ஏதஸ்யாஶ்ச விஶேஷோऽயம் நிக$_3$மாந்தேஷு ஶப்$_3$த்$_3$யதே" என்றும் ..... ப$_4$க$_3$வச்ச$_2$ாஸ்த்ரத்திலே தானே அருளிச்செய்தானிறே.

வாத்ஸல்ய - ஔத3ார்ய - ஐஶ்வர்ய - ஸௌந்த3ர்ய - ஶரண்யத்வ - ஆர்த்திஹரத்வ - வாத்ஸல்யங்களாகிற பத்து கு3ணங்கள் அநுஸந்தி4க்கத்தக்கவை என்கின்றனர். வேறு சிலர் மேலே சொன்ன எல்லாம் அநுஸந்தி4க்கத்தக்கவை என்கிறார்கள். வேதம் வல்லாரான சில ஆசார்யர்கள் வாத்ஸல்யம் - ஸ்வாமித்வம் - ஸௌஶீல்யம் ஸௌலப்4யம் என்னும் நான்கு கு3ணங்களை அநுஸந்தி4க்கவேணுமென்கின்றனர். மற்ற சில ஆசார்யர்கள் ஶ்ரிய:பதித்வம், நாராயணத்வம் ஆகிய இரண்டு கு3ணங்களை அநுஸந்தி4க்கும்படி கூறுகிறார்கள். பேரருளாளனே! உன்னிடம் நம்பிக்கை உண்டாக்குவதற்கு இந்த கு3ணங்கள் ஸமமாகப் பயன்படுகின்றன.

8) கார்ப்பண்யவாக்யவிஶதே3ந நிஸர்க்க3ஜேந
த்வத்பாரதந்த்ர்யவிப4வேந ஸுஶிக்ஷிதேந |
ப4க்த்யா ச ஶக்திவிரஹேண க்ருதாதி4காரா:
ஸந்த: கரீஶசரணௌ ஶரணம் வ்ரஜந்தி ||

‘உபாயாந்தரமில்லாதவன்’ என்று கூறும் வாக்யத்தில் கூறப்பட்டதும், திருமந்த்ரத்தில் நன்கு விளக்கப்பட்டதுமான பாரதந்த்ர்யஸ்வரூபத்தாலோ, ப4க்திபாரவஶ்யத்தாலோ, அஜ்ஞான அஶக்திகளாலோ கிட்டிய ஆகிஞ்சந்யமுடைய அதி4காரிகளாய் பேரருளாளனான எம்பெருமான் திருவடிகளை ஶரணம் அடைகிறார்கள்[1]. ந்யாஸத்துக்கு அதி4காரிகள் அஶக்தர்களே. ஶரணவரணத்திற்கோ ஸ்வரூபஜ்ஞாநமுடைய ஶக்தர்களும் அதி4காரிகள் என்று வேறுபாடு.

9) ஸௌலப்4யபர்யவஸிதம் சரணோபலக்ஷ்யம்
அர்ச்சாऽऽத்மநா பரிணதம் தவ தி3வ்யரூபம் |
ந்யாஸஸ்ய தே3வ! ஶரணாக3திஶப்3தப4ாஜோ
வாஞ்ச2ந்தி வேத்3யமிதரத்த்விதரஸ்ய வேத்3யம் ||

1) ஸ்ரீவசநபூ4ஷணம் 41, 42

இதில் ப்ரபத்தி பண்ணும் அதி4காரிகள் மூவர். அஜ்ஞரும், ஜ்ஞாநாதி4கரும், ப4க்திவிவஶரும்.

பேரருளாளனே! எளிமைக்கு எல்லை நிலமாய், த்3வயத்திலுள்ள ‘சரணௌ’ என்ற ஶப்3த3த்தினால் குறித்துக் காட்டப்படுமதாய், அர்ச்சையாக உள்ள உன்னுடைய தி3வ்யரூபம் ஶரணவரணத்துக்கு விஷயம்[1], ந்யாஸத்துக்கு பரவ்யூஹவிப4வாந்தர் யாமிகள் விஷயம்.

10) ஏவோக்திரேகபத3மந்யவிமுக்திவாணீ
நிஷ்கர்ஷிகா ஶரணவாக3பி ஹஸ்திநாத2 |
பி4ந்த3ந்த்யுபாயவரணம் பி4து3ராத்ஷட3ங்க3ாத்3
தே3ஶாதிபே4தநியமாஶ்ச தி3ஶந்தி பே4த3ம் ||

“மாமேவ யே ப்ரபத்3யந்தே மாயாமேதாம் தரந்தி தே” (கீ3தை 1-14) (என்னையே எவர்கள் ஶரணமடைகிறார்களோ, அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள்), “தமேவ சாத்3யம் புருஷம் ப்ரபத்3யே” (கீ3தை 15-4) (ஆதி3புருஷனான அவனையே ஶரணமடைகிறேன்) முதலானவிடங்களில் உள்ள ஏவகாரமும், சரமஶ்லோகத்தில் “மாமேகம் ஶரணம்” என்றவிடத்திலுள்ள “ஏக” பத3மும் ஶரணம் ஒன்றே என்று காட்டுகிறது[2].

1) ஸ்ரீவசநபூ4ஷணம் 24, 34

விஷயநியமமேயுள்ளது.

விஷயநியமமாவது - கு3ணபூர்த்தியுள்ளவிடமே விஷயமாகை; பூர்த்தியுள்ளதும் அர்ச்சாவதாரத்திலே.

2) முமுக்ஷுப்படி 220, மற்றும் 221

இந்த ஏகஶப்3த3ம் ஸ்த2ாநப்ரமாணத்தாலே அவதா3ரணார்த்த2த்தைக் காட்டுகிறது. “மாமேவ யே ப்ரபத்3யந்தே”, “தமேவ சாத்3யம்”, “த்வமேவோபாயபூ4தோ மே ப4வ” “ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்” என்றுஞ் சொல்லுகிறபடியே.

"உபாயே க்₃ருஹரக்ஷித்ரோ: ஶப்₃த₃: ஶரணமித்யயம்

வர்த்ததே ஸாம்ப்ரதம் சைஷ உபாயார்த்தை₂க வாசக:" (அஹிர்புத்₃ந்ய ஸம்ஹிதா 36-36) என்கிற வசனத்தின்படி "ஶரண" ஶப்₃த₃ம் உபாயம், வீடு, ரக்ஷகன் என்ற மூன்று பொருள்களையுடையதாயினும் "உபாயம்" என்ற பொருளையே இவ்விடத்தில் கூறுகிறது. ஒருவனே உபாயம் என்றால் மற்றவை உபாயமல்ல என்று தேறுகிறது. இங்கு ஸாத₄னமன்றென்று விலக்கப்படுவது எது எனில்; கர்மஜ்ஞாநப₄க்திகளென்ன வொண்ணாது, அவை முன்பே "ஸர்வத₄ர்மாந் பரித்யஜ்ய" என்ற அந்யவிமுக்திவாணியால் விலக்கப்பட்டுவிட்டபடியால். தே₃வதாந்தரங்களை வேறுபடுத்துவதாகக் கூறமுடியாது, கீழே "மாம்" (என்னை) என்று தன்னைச் சுட்டிக்காட்டியபோதே மற்ற தெய்வங்களை விலக்கிவிட்டபடியால். ஆக, "ஏக" பத₃ம் எம்பெருமானை ஶரணமாகப் பற்றும் ஸ்வீகாரத்தில் உபாயபுத்₃தி₄யையே கழிக்கிறது[1]. ஆகையால், 'யத்₃யத் ஸாங்க₃ம் தத் தத் ஸாத₄நம்' (எது எது அங்க₃த்தோடு கூடியதோ, அது அது ஸாத₄நம்) என்ற ந்யாயத்தினால் ஆநுகூல்யஸங்கல்பம் முதலான ஆறு அங்க₃ங்களையுடைய உபாயமான ந்யாஸத்தைக் காட்டிலும் உபாயமல்லாததான ஶரணவரணம் வேறுபடுகிறது. ஆனால், அங்க₃முடையது ஸாத₄னம் எனில், சரமஶ்லோகத்தில் உபாயஸ்வீகாரம் உபாயாந்தர பரித்யாக₃மாகிற அங்க₃த்தோடே, விதி₄க்கப்படுவதால், ஶரணவரணமும் உபாயந்தானே என்ற கேள்வி எழுகிறது.

1) முமுக்ஷுப்படி ஸூத்ரம் 222, அதன் வ்யாக்₂யானம்
இத்தால் "வ்ரஜ" என்கிற ஸ்வீகாரத்தில் உபாயப₄ாவத்தைத் தவிர்க்கிறது.

அதாவது - உபாயாந்தரங்கள் வ்யாவர்த்யமாமளவில் பௌநருக்த்யம் ப்ரஸங்கி₃ங்கையாலும், தே₃வதாந்தரங்கள் வ்யாவர்த்யமாமளவில் "மாம்" என்று அஸாத₄ாரணாகாரத்தைச் சொல்லுகையாலே அது கீழே ஸித்₃த₄மாகையாலும், இந்த அவத₄ாரணத்தால் "வ்ரஜ்" என்று மேல் சொல்லுகிற ஸ்வீகாரத்தில் உபாயத்வத்தைக் கழிக்கிறது என்கை.

இதற்கு ஸமாத₄ானம் என்னவெனில் - "யத்₃யத் ஸாத₄நம்" என்ற விடத்தில் ப்ரவ்ருத்திரூபமான அங்க₃த்தோடு கூடியதையே உபாயமாகச் சொல்கிறது. இங்கு ஶரணவரணம் வேறு உபாயங்களைக் கைகொள்வதில் நின்றும் அடியோடு நீங்குவதையே அங்க₃மாக உடையதாதலால், இது உபாயமாகாது[1]. மேலும், தே₃ஶநியமம், கால நியமம் முதலான நியமங்களும் அந்நியமங்களையுடைய ந்யாஸத்தை தே₃ஶகாலாதி₃ நியமமில்லாத[2] ஶரணவரணத்தைக் காட்டிலும் வேறுபடுத்திக் காட்டுகின்றன.

11) உபாயே ஸாத்₄யே ஸ்யாத₃தி₄க்ருதிஷு ஸித்₃த₄த்வ நியம:
ப்ரஸித்₃தே₄ ஸித்₃தே₄ऽஸ்மிந்ப்ரப₄வதி து ஸாத்₄யாऽப்யதி₄க்ருதி: |
ப்ரபத்தௌ "த்வா" ஶப்த: ப்ரக₄டயதி ஸித்₃த₄ாநுவத₃நம்
விதூ₄தம் ஹஸ்தீஶ! ஸ்பு₂டமிஹ விருத்₃த₄த்ரிகவச: ||

1) ஸ்ரீவசநபூ₄ஷணம் 55ம் ஸூத்ர வ்யாக்₂யானம்

சரமஶ்லோகத்தில் இத்தை ஸாங்க₃மாக விதி₄க்கையாலே 'யத்₃யத்ஸாங்க₃ம், தத்தத் ஸாத₄நம்' என்கிற ந்யாயமிதுக்கும் வாரோதோவென்ன, அங்க₃ ஸ்வரூபத்தை த₃ர்ஶிப்பிக்கவே அந்த ந்யாயமிங்கு வாராதென்று பார்த்து அது தன்னை அருளிச் செய்கிறார். (அங்க₃ம்) என்று துடங்கி. (தன்னையொழிந்தவற்றைப் பொறாதொழிகை) யாவது - ஸ்வீகாரரூபமான தன்னையொழிந்த சேதந ப்ரவ்ருத்திகளினுடையவும் ஸவாஸநத்யாக₃மிறேயிதுக்கங்க₃ம். 'யத்₃யத் ஸாங்க₃ம்' என்கிறவிடத்தில், ப்ரவ்ருத்திரூபாங்க₃ஸஹிதமானவற்றையிறே ஸாத₄னமாகச் சொல்லுகிறது. அப்படியன்றிக்கே இதினுடைய அங்க₃ம் நிவ்ருத்திரூபமாகையாலே, இதுதானே இதினுடைய அநுபாயத்வ ஸூசகமென்று கருத்து.

2) ஸ்ரீவசநபூ₄ஷணம் 23

ப்ரபத்திக்கு தே₃ஶநியமமும், காலநியமமும், ப்ரகாரநியமமும், அதி₄காரிநியமமும், ப₂லநியமமுமில்லை.

புருஷனுடைய முயற்சியால் செய்யக்கூடிய உபாயங்களில் தான் (அதாவது ஜ்யோதிஷ்டோமாதி$_3$ யாக$_3$ங்களில்) ஸ்வர்க்க$_3$த்தில் இச்சை முதலான ஸித்$_3$த$_4$மானது, அந்த யாக$_3$ம் முதலியதைச் செய்யும் அதி$_4$காரிக்கு விஶேஷணமாகும். புருஷமுயற்சி தேவையில்லாத ஏற்கனவே ஸித்$_3$த$_4$மான உபாயத்தில் ஸாத்$_4$யமே அதி$_4$காரி விஶேஷணம். எம்பெருமான் ஸித்$_3$தே$_4$பாயம். ஸாத்$_4$யமான ஶரணவரணமே அதி$_4$காரிவிஶேஷணம் அல்லது சரமஶ்லோகத்தில் “த்வா” என்ற ஶப்$_3$த$_3$த்தால் ‘ப்ரபந்நனான உன்னை’ என்று ப்ரபத்தி, அதி$_4$காரிவிசேஷணமாகச் சொல்லப்படுவதால், இங்கும் அதி$_4$காரிவிஶேஷணம் ஸித்$_3$த$_4$ம். பேரருளாளனே! ஆதலால் ஶாஸ்த்ரஜ்ஞராலே கூறப்படும் விருத்$_3$த$_4$த்ரிகதே$_3$ஷம் விலக்கப்படுகிறது.

12) ஸ்வவிஷயவரணாப்தோபாயஸம்ப$_3$ந்த$_4$மூர்த்தௌ
ஶரணவரணமேதத்ஸந்நிவிஷ்டம் யத$_3$ாஸீத் |
அத இத$_3$மநுபாயோऽப்யாக$_3$தாவஶ்யப$_4$ாவம்
கரிகி$_3$ரிநிலயாபூ$_4$த் க்வாப்யுபாயோக்திமாத்ரம் ||

ஶரணவரணத்துக்கு விஷயம் ஸித்தே$_4$பாயமான எம்பெருமான். இந்த ஶரணவரணத்தினால் அடையப்படுவதும் அந்த உபாயமே (எம்பெருமானே). இவ்வாறு ஶரணவரணத்துக்கு ஸித்$_3$தே$_4$பாயத்துடன் ஸம்ப$_3$ந்த$_4$முள்ளதால், ஸாக்ஷாத் உபாயத்வமற்றபொழுதிலும், ஶரணவரணமானது உபாயம் என்று கூறப்படுகிறது. மேலும் ப்ரபத்திவித்$_3$யையில் ஸித்$_3$தே$_4$பாயமான எம்பெருமான் ஶரணவரணபு$_3$த்$_3$தி$_4$ உடையவர்க்கே பலனளிக்கிறான். ஆகையால் அநுபாயமாயினும் ஶரணவரணம் அவஶ்யமாகிறபடியால் பேச்சுமட்டில் உபாயம் எனப்படுகிறது.

13) அஹேதுஸ்ஸந்யஸ்மாத்ப்ரணுத$_3$ த$_3$மதாபாத$_3$நகத$_2$ாம்
தத$_3$ஸ்ய வ்யாஜத்வம் வரத$_3$! ப$_3$ப$_4$ணு: பூர்வகு$_3$ரவ: |
உபாயஸ்வீகாரே ப்ரபு$_4$மத விக$_4$ாதாத்யயதயா
நியுக்தா தந்த்ரஜ்ஞைர் நிபுணமவிவாத$_3$ாநுமதிகீ$_3$: ||

வ்யாஜம் என்றால் ‘அஹேதுத்வே ஸதி அதிப்ரஸங்க$_3$வாரகம்’ (காரணமில்லாது விலக்கக்கூடியது) என்பதாகும். ஸித்$_3$தே$_4$பாயத்தை வரிக்கும் அதி$_4$காரிக்கு விஶேஷணமான ப்ரபத்தியில் வ்யாஜத்வம் என்பது உண்டு என்கிறார்கள் பூர்வாசார்யர்கள். ஏனெனில், அந்த ப்ரபத்தி முக்திக்குக் காரணமாகாது. அனைவருக்கும் முக்தி என்ற அதிப்ரஸங்க$_3$த்தைத் தடுக்கிறது. ஸித்$_3$தே$_4$பாய ஸ்வீகாரமாவது நிரபேக்ஷோபாயமான (எதையும் எதிர்பாராத உபாயமான) எம்பெருமானுக்கு விருப்பமான நிர்ஹேதுக ரக்ஷணத்துக்குத் தடையான உபாயாந்தர ஸம்ப$_3$ந்தமில்லாமை. அதாவது, ப$_4$க$_3$வானுடைய ப்ரயத்னத்துக்கு விரோதி$_4$யான தன்முயற்சியின்மை என்பது. ஆகையால் அவிவாதே$_3$ாக்தியும், அனுமதிவசனமும் ப்ரபத்தி விஷயத்தில் முன்னோர்களால் சொல்லப்படுகின்றன.

14) அநாத்மேஶாத்யந்தாபி$_4$மதிவிஷயோபாயக்ருதிதா
ஸ்வரூபம் ஜீவாநாம் வரத$_3$! கத$_2$யாமாஸுரநக$_4$ா: |
விமோக்ஷே பே$_4$ாகே$_3$ வா கரணயதநார்ஹத்வவிரஹம்
தத$_3$ாஹுஸ்தஸ்யேத$_3$ம் ஶரணவரணம் ஸ்யாத$_3$நுகு$_3$ணம் ||

சேதனன் ஸாத$_4$நாந்தரங்களில் ப்ரவர்த்திப்பது எம்பெருமானுக்கு மிகவும் விருப்பமில்லாதது. ஜீவர்களுக்கு தன்னுடைய ரக்ஷணத்தில் முயற்சியற்றிருப்பதாகிற பாரதந்தர்யம் ஸ்வரூபம். இவ்விதமான பாரதந்த்ர்யமுடையவர்களாய், அதனால் குற்றமற்றவர்களான பூர்வாசார்யர்கள் ‘பே$_4$ாக$_3$மோ, மோக்ஷமோ எதிலும் ஸாத$_4$நங்களில் முயற்சியில்லாமை ஜீவஸ்வரூபம். அந்த ஸ்வரூபத்துக்கு இந்த ஶரணவரணம் தக்கதாயிருக்கும்’ என்று கூறினார்கள்.

15) உபாஸநாதே$_3$ரநுபாயதேஷ்டா யத்$_3$வா ஸ்வரூபாநுசிதத்வ மிஷ்டம் |
தத்ஸாதி$_4$தம் ஸாதிஶயம் ப$_2$லம் ஸ்யாத்த்வத்ஸாத்$_4$யமேகம் வரத$_3$ாதிதுங்க$_3$ம் ||

உபாஸநம் முதலியவற்றில், அநுபாயத்வ பு$_3$த்$_3$தி$_4$ விரும்பத்தக்கது. உபாயம் என்ற நினைவு விலகினால் கர்மம் கைங்கர்யத்தில் அடங்கும். ஜ்ஞாநம் ஸ்வரூபப்ரகாஶத்தில் அடங்கும். ப$_4$க்தி ப்ராப்யருசியிலே புகும்[1]. ஆதலால் ஸ்வரூப விரோத$_4$மில்லை. உபாயம் என்ற நினைவு தொடருமாகில் ஸ்வரூபத்திற்குத் தகாதது என்பது சரியே. மேலும், அதனால் ஸாதி$_4$க்கப்பட்ட மோக்ஷமாகிய ப$_2$லம் அளவுபட்டதாய், அல்பமாயிருக்கும். பேரருளாளனே! ஸித்$_3$தே$_4$ாபாயமான உன்னால் பெறப்படும் ப$_2$லம் உத்துங்க$_3$மாய் மிக உயர்ந்ததாயிருக்கும்.

16) ததி$_3$தரநிரபேக்ஷோபாயப$_4$ாவம் கரீஶ
ஶரணவரணவேத்$_3$யாகாரமாஹுர்நயஜ்ஞா: |
லகு$_4$நி நநு ஷடங்கே$_3$ ரக்ஷகத்வம் தத$_3$ாஹு:
ப்ரபத$_3$ந பரவித்$_3$யா பி$_4$த்யதேऽத்$_3$யாத்மநாऽத: ||

மேலும் வேத்$_3$யாகாரம் வேறுபடுவதால் ந்யாஸமும், ஶரணாகதியும் வெவ்வேறாகும்.

எம்பெருமான் தன்னைத் தவிர வேறு எதையும் எதிர்பாராத உபாயமாவான் என்பது ஶரணவரணத்தில் ப$_4$க$_3$வானை அறிய வேண்டிய ரூபம். ஆநுகூல்ய ஸங்கல்பாதி$_3$ ஆறு அங்க$_3$ங்களுள்ள ந்யாஸத்தில் அவனை அறிய வேண்டிய ரூபம் ரக்ஷகன் என்பது. ஆக ரூபபே$_4$த$_3$த்தால் ந்யாஸவித்$_3$யா, ப்ரபத்தி வித்$_3$யா இரண்டும் வெவ்வேறாகும்.

1) முமுக்ஷுப்படி - 271

கர்மம்-கைங்கர்யத்திலே புகும்; ஜ்ஞாநம் - ஸ்வரூபப்ரகாஶத்திலே புகும்; ப$_4$க்தி - ப்ராப்யருசியிலே புகும்; ப்ரபத்தி - ஸ்வரூபயாத$_2$ாத்ம்ய ஜ்ஞாநத்திலே புகும்.

17) பஞ்சஹ்யங்க$_3$ாநி பூர்வாண்யத$_2$ நிஜப$_4$ரநிக்ஷேபணம் த்வங்கி$_3$பூ$_4$தம்
ஸாங்க$_3$ஞ்சாங்க்$_3$யுத்தராங்க$_3$ம் நஹி ப$_4$வதி ததோ லக்ஷணா ஷட்$_3$விதே$_4$ாக்தே: |
ஸ்வீகாரே ஹ்யாநுகூல்யப்ரப்$_4$ருதி கில யத$_2$ாஸம்ப$_4$வப்ராப்தமிஷ்டம்
தஸ்மாந்மாத$_3$ர்த்த்$_2$யக$_3$ர்ப்$_3$ப$_4$ம் கரிகி$_3$ரிநிலயேதம் த்வத$_3$ர்த்த$_2$த்வக$_3$ர்ப்$_3$ப$_4$ம் ||

ஆநுகூல்யஸங்கல்பம் முதலிய ஐந்து தான் ந்யாஸத்தில் அங்க$_3$ங்கள். ஆத்மாத்மீய ப$_4$ரஸமர்ப்பணமாகிற ஆத்மநிக்ஷேபம் அங்கீ$_3$ (ப்ரத$_4$ாநம்). அங்க$_3$ம் அங்கீ$_3$ இரண்டையும் சேர்த்து ஷடங்க$_3$ம் என்று அமுக்$_2$யமான அர்த்த$_2$முள்ள ஶப்த$_3$ம். ஆகையால் லக்ஷணை கொள்ள வேண்டியிருக்கிறது. ஶரணவரணமாகிற ஸித்$_3$தே$_4$ாபாய ஸ்வீகாரத்தில் ஆநுகூல்யஸங்கல்பம் முதலியதும், ஆத்மநிக்ஷேபமும் அங்க$_3$ம். ஶரணவரணம் ப்ரத$_4$ாநம்(அங்கீ$_3$) ஆகையால் லக்ஷணை கொள்ள வேண்டியதில்லை. ஶரணவரணம் உபாயமில்லை. ஆகையால் அங்க$_3$த்தை எதிர்பார்க்காது. ஆறு அங்க$_3$ங்கள் அதி$_4$காரி பூர்த்திக்காக. அவற்றுள் முடிந்தவற்றைக் கொள்ள வேண்டும். ந்யாஸத்தில் ஒரு அங்கம் குறைந்தாலும் ஸாத$_4$நமாகாமையாலே எல்லா அங்க$_3$ங்களையும் கொள்ள வேண்டும். அத்திகி$_3$ரி அருளாளனே! ந்யாஸம் உபாயமாகையாலே கரணத்வாபி$_4$மாநரூபமான அஹங்காரத்தைக் கொண்டது. ஶரணவரணம் உபாயமில்லாமையாலே உனக்காக என்கிற ஶேஷத்வாபி$_4$மாநம் கொண்டது.

18) கரிகி$_3$ரிபதிவீக்ஷாக்லுப்தநிஷ்க்ருஷ்டஸத்த்வா
ந்யஸநப$_4$ஜநஹேதோர் நிர்க$_3$தாஸ்ஸத்த்வபே$_4$த$_3$ாத் |
விஹிதவிஷயசிந்தாம் விஸ்மரந்தோ விஶிஷ்டா:
கதிசந ஶரணம் த்வாऽऽகாங்க்ஷயா கல்பயந்தே ||

அத்திகிரிப்பேரருளாளனுடைய ஜாயமாநகாலகடாக்ஷத்தாலே தூய ஸத்த்வ கு$_3$ணமுடையராய், ந்யாஸ உபாஸனங்களை விட்டவர்களாய், விஹிதவிஷய ப்ரயத்னமில்லாதவர்களான சிறந்த அதி$_4$காரிகள் சிலர் ப்ரீதியால் ப$_4$க$_3$வானை ஶரணமாகக் கொள்கிறார்கள்.

19) ப$_3$லவத$_3$ பி$_4$மதாநுப$_3$ந்த$_4$ஹாநேரநபி$_4$மதேஷ்வநுப$_3$ந்தி$_4$நோ யதை$_2$வ |
அபி ப$_4$ஜநவிதே$_4$: பராபநுத்யை வரத$_3$! வத$_3$ந்தி கில ப்ரவ்ருத்தி மார்யா: ||

வேத$_3$ாந்தங்கள் உபாஸனத்தை எதற்காக விதி$_4$த்தன என்பதற்கு விடைகூறுகிறார் இந்த ஶ்லோகத்தில் மிகவும் இஷ்டமான ப$_2$லத்துடன் ஸம்ப$_3$ந்த$_4$மில்லாமையால், விருப்பமில்லாத பரஹிம்ஸை முதலியவற்றுடன் ஸம்ப$_3$ந்த$_4$முள்ள "ஶ்யேநேநாபி$_4$சரந் யஜேத"(ஶத்ருவின் மரணத்தை விரும்புமவன் ஶ்யேந யாக$_3$த்தை பண்ணக்கடவன்) என்கிற விதி$_4$யால் விதி$_4$க்கப்பட்ட யாக$_3$ம், நாஸ்திகனுக்கு ஆஸ்திக்யமுண்டாக்குகைக்காக என்பது போல, "உபாஸீத" முதலான ப$_4$ஜன விதி$_4$யும் ப$_2$லத்துக்காகச் செய்யப்படும் காம்ய கர்மங்களை விலக்குவதற்காக வந்தது என்று பெரியோர் கூறுகின்றனர்[1].

20)ப்ரபத்தித்வேநைக்யாத்$_3$வரத$_3$! நிக$_3$மாரம்ப$_4$வசஸோ:
அபே$_4$தே$_3$ா நிர்வ்யூட$_4$: ப்ரபத$_3$நமதோத்$_3$வயாத்மகமிதம் |
உபாயஸ்வீகாரப்ரதிநியதத$_4$ர்மாந்ஜட$_3$தி$_4$யாம்
ஷட$_3$ங்கே$_3$ த்வஶ்ரத்$_3$த$_4$ாப்ரஶமநக்ருதே கேசிதவத$_3$ந் ||

1) ஸ்ரீ வசநபூ$_4$ஷணம் 127, 129, தத்$_3$வ்யாக்$_2$யானம்.
வேத$_3$ாந்தங்களுபாயமாக விதி$_4$க்கிறபடியென் என்னில்
இத்தை ப்ரவர்த்திப்பித்தது பரஹிம்ஸையை நிவர்த்திப்பிக்கைக்காக.

பரஹிம்ஸை என்றது மேலான ஹிம்ஸை. அதாவது - ஶ்யேந விதி$_4$க்கு மேலாக விதி$_4$க்கப்பட்ட பஶ்வாலம்ப$_4$நாதி$_3$களைச் சொன்னபடி. இத்தால் காம்ய கர்மத்தைச் சொன்னபடி. உபாஸநவிதி$_4$க்கு நிவர்த்யம் காம்யகர்மமாக இவர்தாமே பரந்தபடி ரஹஸ்யத்திலே அருளிச்செய்கையாலே.

ப்ரபத்தி ஶாஸ்த்ரங்களில் ஶரணவரண ஶப்$_3$த$_3$த்தால் தொடங்கி ந்யாஸம் என்ற பத$_3$த்தால் முடிப்பதாலும், ந்யாஸ ஶப்$_3$த$_3$த்தில் தொடங்கி ஶரணக$_3$தி ஶப்$_3$த$_3$த்தில் முடிப்பதாலும் ஶரணவரணமும், ந்யாஸமும் ஒன்று என்று தோன்றுவது, ப்ரபத்தி என்ற ரூபத்தில் இரண்டும் ஒன்றாயிருப்பதால் என்று நிர்வாஹம் செய்யப்பட்டது. ஶரணவரணத்துக்கேயுரிய புருஷகாரம், த$_4$ர்மத்யாக$_3$ம் ஆகிய த$_4$ர்மங்களை மந்த$_3$மதிகளுடைய அஶ்ரத்$_3$தை$_4$யைப் போக்குவதற்காக சிலர் ந்யாஸத்திற்கும் கூறினார்கள். ஆகையால் இந்த ப்ரபத்தி ந்யாஸம், ஶரணவரணம் என்று இரண்டாகவேயுள்ளது.

21) விபீ$_4$தா: புண்யாத$_3$ப்யநிதரஶரண்யத்வரஸிகா:
ப்ரகாமம் கைமுத்யாத்$_3$ப$_4$யபரவஶா து$_3$ஷ்க்ருதலவாத் |
அபர்யந்தப்ரேம்ண : கரிஶிக$_2$ரிநாத$_2$ஸ்ய நிபி$_3$ட$_3$ாம்
ஸ்வவாத்ஸல்யாபேக்ஷாம் ஸபதி$_3$ பரிஶிஷ்யந்தி க்ருதிந: ||

ஶாஸ்த்ரங்களால் செய்யுமாறு கட்டளையிடப்பட்டதை விட்டால், ஶாஸ்த்ரங்களில் தடைசெய்யப்பட்டது வந்து புகுந்துவிடுமே என்ற ஸந்தே$_3$ஹத்துக்கு பதிலளிக்கிறார் இந்த ஶ்லோகத்தில். எம்பெருமானையல்லால் வேறு உபாயமில்லை என்கிற அநந்யோபாயத்வ ஜ்ஞானத்தை ரஸிக்கும் பெரியோர்கள் புண்யத்துக்கும் மிகவும் அஞ்சுபவர்கள். அவர்கள் பாபத்துக்கும் அஞ்சுவார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை[1]. அதனால் அளவற்ற ப்ரேமத்தையுடைய பேரருளாளனுக்கு,

1) ஸ்ரீவசநபூ$_4$ஷணம் 279
புண்யத்துக்கஞ்சுகிறவன் பாபத்தைப் பண்ணானிறே.

வ்யா: - "புண்யத்துக்கஞ்சுகிறவன் பாபத்தைப் பண்ணானிறே" என்றது - ப$_4$க$_3$வதநுக்$_3$ரஹ ஹேதுவாக ஶாஸ்த்ரஸித்$_3$த$_4$மாயிருக்கச் செய்தேயும் மோக்ஷவிரோதியென்னுமத்தாலே புண்யம் செய்கைக்குட்பட அஞ்சுகிற அதி$_4$காரி, ப$_4$க$_3$வந்நிக்$_3$ரஹ ஹேதுவாக ஶாஸ்த்ரஸித்$_3$த$_4$மாய், நரகாவஹமென்று ஸாமாந்யருமுட்படச் செய்யாத பாபத்தை ஒருக்காலும் செய்யானிறேயென்கை.

தன்னை ஆஶ்ரயித்தவர்களிடம் வாத்ஸல்யத்தாலே தே3ாஷத்தை எதிர்பார்ப்பதை மட்டும் இப்பெரியோர்கள் மிச்சப்படுத்துகிறார்கள். தே3ாஷாபேக்ஷையுண்டு எம்பெருமானுக்கு. ஆனால் பெரியவர்கள் தே3ாஷம் செய்வதில்லை. அதனால் அபேக்ஷை தான் விஞ்சும்[1].

22)த4ர்மிக்3ராஹகமாநத: ப்ரமிதயோ: கர்த்ருத்வபோ4க்த்ருத்வயோ:
ஶேஷத்வேந மநோருபக்ரமக3தேநாத்மார்த்த2தாப்ராபணாத் |
ஸ்வார்த்த2த்வம் ப்ரவிஹாய கேவலபரப்ரீதேஸ்ஸ்வப4ாவாஸ்பத3ம்
கைங்கர்யம் ப2லயந்தி தி3வ்யமிது2நோத்தே3ஶேந மத்3தே3ஶிகா: ||

ஞானமாகிய த4ர்மமுடைய ஆத்மாவைத் தெளிவாகக் காட்டுகிறது ப்ரணவத்திலுள்ள மகாரம். 'மநு-அவபோ3த4நே' என்ற த4ாதுவிலிருந்து உண்டானபடியால் ஆத்மா ஜ்ஞாதா என்று தேறுகிறது. ஜ்ஞாதாவானபோதே கர்த்தா,

1) ஸ்ரீவசநபூ4ஷணம் 280

இவன் புண்யத்தைப் பாபமென்றிருக்கும், அவன் பாபத்தைப் புண்யமென்றிருக்கும். அவனுக்கது கிடையாது. இவனது செய்யான்.

புண்யபாபங்களிரண்டும் மோக்ஷவிரோதி4யென்றிருக்கும் இவ்வதி4காரி, நாட்டார் ஸுக2ஹேதுவென்று விரும்பியிருக்கும் புண்யத்தைப் ப4க3வத்ப்ராப்தி ப்ரதிப3ந்த4கதயா அநிஷ்டாவஹமாகையாலே, து:க்க2ஹேதுவான பாபமென்று நினைத்து வெருவியிருக்கும். ஆஶ்ரிதர் செய்த குற்றம் நற்றமாகவே கொள்ளும் அதிமாத்ரவத்ஸாலனான ஈஶ்வரன், இவ்வதி4காரி ஏதேனுமொரு பாபத்தைப் பண்ணிலும் அத்தைக் குற்றமாக நினையாதே நற்றமாக நினைத்துக் கொண்டிருக்கும். அவனப்படியிருந்தானேயாகிலும் இவ்வதி4காரி பாபப்ரவ்ருத்தியில் அந்வயமற்று நியதனாய் வர்த்திக்கையாலே, பாபத்தை புண்யமாகக் கொள்ளும் வத்ஸலனானவனுக்கு அது ஆசைப்பட்டுபோமித்தனையொழிய கிடையாதென்கை.

போ4க்தா என்று தேறும்[1]. ஆக, ப்ரணவத்தின் கடைசி எழுத்தான மகாரத்தினால் ஆத்மாவுக்கு கர்த்ருத்வ போ4க்ருத்வங்கள் உண்டென்று அறியலாகிறது. ப்ரணவத்தின் ஆரம்ப4த்திலுள்ள அகாரத்தின் மேலேறிக்கழிந்த நான்காம் வேற்றுமையுருபால் ஶேஷத்வம் சொல்லப்படுகிறது. உபக்ரமந்யாயத்தால் சொல்லப்பட்ட ஶேஷத்வம் ப்ரத4ானமாகையால் கர்த்ருத்வமும், போ4க்ருத்வமும் அமுக்2யங்களாகக் கொள்ளப்படுகிறது. மேலெழத் தோன்றும் 'தனக்காக' என்ற எண்ணத்தை விட்டு, உபாயாந்தரங்களையும் வேறு பயன்களையும் விட்டு, தன் பேற்றுக்குக் காரணமான ப4க3வத்ப்ரீதிக்கும் காரணமாய், திருவுக்கும் எம்பெருமானுக்கும் செய்யும் கைங்கர்யத்தையே நம் ஆசார்யர்கள் ப2லமாகக் கொண்டார்கள்.

23)பரஸ்வஸ்வாதந்த்ர்யம் மநஸி பரிசிந்த்யாகுலமதி:
ஷடங்கே3ாபாஸாப்4யாம் ஶரணவரணாத3ப்யுபரத: |
ஸமுத்3த4ர்த்தும் லோகாந்ஸத3யகு3ருப4ாவேந ஸுலபோ4
கரிக்ஷ்மாப்4ருத்காந்தே கலயதி து கஶ்சிச்ச2ரணதாம் ||

பரதந்த்ரனான தன் ஸ்வாதந்த்ர்யத்துக்கு ப4யந்து ந்யாஸ உபாஸநங்களை விட்டுவிலகியும், எம்பெருமானுடைய ஸ்வாதந்த்ர்யத்துக்கு ப4யந்து[2] ஶரணவரணத்தையும் விட்டு விலகிப் போகின்றவருமான ஓர் ஒப்பற்ற அதி4காரி, மோக்ஷத்துக்கு ஒரே காரணமான கருணையோடு உலகத்தை உஜ்ஜீவிக்கச் செய்ய ஆசார்யனாக அவதரித்த ஸுலப4னான ப4க3வானையே (தன் ஆசார்யனையே) உபாயம் என்று மஹாவிஅ;வாஸம் கொள்ளுகிறான்.

1) தத்த்வத்ரயம் 29, 30

ஜ்ஞாதாவென்றபோதே, கர்த்தாபோ4க்தா என்னுமிடம் சொல்லிற்றாயிற்று. கர்த்ருத்வ போ4க்த்ருத்வங்கள் ஜ்ஞாநாவஸ்த2ா விஶேஷங்களாகையாலே.

2) ஸ்ரீவசநபூ4ஷணம் 444, 445

ஸ்வஸ்வாந்த்ர்ய ப4யத்தாலே ப4க்தி நழுவிற்று. ப4க3வத்ஸ்வாதந்த்ர்ய ப4யத்தாலே ப்ரபத்தி நழுவிற்று.

24)அஜ்ஞாநஶக்தாந்விது$_3$ஷோSதிப$_4$க்தாந்
ப்ரபத்திரார்யாங்க்$_4$ரியுகே$_3$ ப்ரயுக்தா |
அங்க$_3$ாங்கி$_3$ ப$_4$ாவேந விகல்பப$_4$ாஜா
புஷ்ணாதி துல்யம் ப$_4$க$_3$வத்ப்ரபத்த்யா ||

ஆசார்யன் திருவடிகளில் பண்ணின ப்ரபத்தி, ப$_4$க$_3$வானை அடைய உபாயத்தை அநுஷ்டி$_2$க்கைக்குத்தக்க ஞானமில்லாதவர்களையும், ஶக்தியில்லாதவர்களையும், ஜ்ஞானம் ஶக்தி முதலானவை இருந்தாலும் எம்பெருமானுக்கு அத்யந்தபரதந்த்ரமான ஸ்வரூபத்தை உள்ளபடி உணரும் ஜ்ஞாநமுடையவராய் உபாயாந்தரங்கள் ஸ்வரூப விருத்$_3$த$_4$ம் என்று விடும்படியான ஜ்ஞானபூர்த்தியையுடையவர்களையும், ஒன்றையும் க்ரமமாக அநுஷ்டி$_2$க்கமுடியாத ப்ரேமத்தின் மிகுதியால் உபாயத்தில் ஊற்றமில்லாது ப்ராப்யத்திலேயே ஊன்றியிருப்பவர்களையும் அங்க$_3$ாங்கி$_3$ப$_4$ாவத்தாலே விகல்பிக்கப்படுகிற ப$_4$கவத்ப்ரபத்திக்கு ஸமமாகவே ரக்ஷிக்கிறது[1].

25)வரவரமுநிநேதுர்வாக்ய தாத்பர்யவேதீ$_3$
வரத$_3$கு$_3$ருரிமம் மாம் வத்ஸலோSவேக்ஷ்ய த்$_3$ருஷ்ட்யா |
ஶரணவரண தத்த்வம் ஶப்த$_3$யாமாஸ ஸந்த:
ஸரஸகு$_3$ண நிகாயாஸ்ஸாத$_3$ரம் ஸ்வீகுருத்$_4$வம் ||

மணவாளமாமுனிகளுடைய தி$_3$வ்யஸூக்திகளின் தாத்பர்யமறிந்தவரும், அடியேனுடைய ஆசார்யருமான வாதூ$_4$ல வரத$_3$கு$_3$ரு வாத்ஸல்யமுடையவராய் இந்த அடியேனைக் கடாக்ஷித்து ஶரணவரணதத்த்வத்தை அருளினார். என் புத்$_3$தி$_4$யினால் சொல்லப்பட்டது எதுவுமில்லை. ஸம்ப்ரத$_3$ாயரஸிகர்கள் தங்கள் கல்யாணகு$_3$ண முடைமையால் அன்புடன் ஏற்க வேண்டும்.

1) ஸ்ரீவசநபூ$_4$ஷணம் 461

ஆசார்யாபி$_4$மாநந்தான் ப்ரபத்தி போலே உபாயாந்தரங்களுக்கங்க$_3$முமாய், ஸ்வதந்தரமுமாயிருக்கும்.

யஸ்ஸ்துதிம் கரிகி$_3$ரீஶதோஷிணீம்
வ்யாஹரத்$_3$வரணபஞ்சவிம்ஶதிம் |
தம் வதூ$_4$லகுலது$_4$ர்யமாஶ்ரயே
வீரராக$_4$வகு$_3$ரும் த$_3$யாநிதி$_4$ம் || (வானமாமலைஜீயர்ஸ்வாமி அருளிச்செய்தது)

அத்திகிரிப்பேரருளாளனுடைய உகப்புக்குக் காரணமாயும், ஸ்தோத்ரரூபமாயுள்ள வரணபஞ்சவிம்ஶதியை எவர் அருளினாரோ, அந்த வாதூ$_4$ல குலது$_4$ரந்த$_4$ரரும், த$_3$யாநிதி$_4$யுமான வீரராக$_4$வகு$_3$ரு என்கிற அண்ணாவப்பங்கார் ஸ்வாமியை ஶரணமாகப் பற்றுகிறேன்.

அண்ணாவப்பங்கார்ஸ்வாமி திருவடிகளே ஶரணம்